# பொறுமையின் பெட்டகம்
# இமாம் மூஸா
# அல் காழிம்
# அலைஹிஸ் ஸலாம்

ஜனனம்

அப்வா (1) எனும் கிராமம் அன்று (2) காலை ஏதோ மாற்றமடைந்தாற் போல் காட்சியளித்தது. சூரிய ஒளிக்கீற்றுக்கள் தலைநிமிர்ந்து நிற்கும் ஈச்சமரங்களுக்கு தங்கப் படலமிட்டு அதன் நீண்ட நிழல்களை கிராமத்துச் சுவர்களிலும் களிமண் மதில்களிலும் பாய்ச்சி இருந்தது.

பாலைவனத்துக்கு இடையனோடு போய்க் கொண்டிருக்கும் ஒட்டகங்களினதும் ஆடுகளினதும் சப்தம் காலையில் உள்ளத்துக்கு உற்சாகத்தை வழங்கிக் கொண்டிருந்தது. காதுகள் வாழ்வின் ஓசைகளை சேகரித்துக் கொண்டிருந்தன.

கிராமத்திற்கருகில் ஒருபள்ளத்தாக்கு. அதிலே ஒரு நீரூற்று. பெண்கள் அதன் அமைதியான சுத்தமான நீரை அள்ளிக் கொண்டிருக்கிறார்கள். தென்றல் வருடிச் சென்றதால் உருவான மென்மையான அலைகளால் அது மேலும் பெருகு பெற்றது..

அபாபீல் பறவைகள் சில ஆங்காங்கே துள்ளித் திரிந்தன அடிக்கடி நீர்த் தடாகத்தில் விழுந்தன. யானை வருடத்து சிஜ்ஜீல்களின் உஷ்ணம் போகவில்லை போலும்.

சற்று அந்தப் பக்கமாக ஒரு தனிமரம் -ஈச்சை- தனது பச்சைக் குடையை விரித்து அதற்குக் கீழுள்ள ஓர் அடக்கஸ்தலத்துக்கு நிழல் கொடுத்துக் கொண்டிருந்தது. ஒரு பெண் அந்தக் காலைவேளையில் அதன் கீழே இருந்து துவண்டு, மெல்ல மெல்ல அழுது கொண்டிருந்தாள். தனது உதடுகளால் ஏதோ முனகினாள் அவளது வார்த்தைகள் காற்றில் கலந்து கொண்டிருந்தன.

“ஆமினாவே உமக்கு வாழ்த்துகள் உரித்தாகட்டும். நபிகளாரின் சங்கை மிக்க தாயே! நீயும் பிறந்தகத்தை விட்டு தூரமான போது இறைவன் தனது ரஹ்மத்தை உனக்களித்தான”

“என் பெயர் ஹமீதா,; உமது பிள்ளையின் பரம்பரையில் இருந்து ஒரு குழந்தையை எனது வயிற்றில் சுமந்துள்ளேன். இரவிலிருந்து இரண்டு நெஞ்சுகள் சுமக்க வேண்டிய வேதனையை அனுபவிக்கின்றேன்.. இன்றே

இக்குழந்தையை இக்கிராமத்திலுள்ள நீரூற்றின் அருகில் உங்களுக்குப் பக்கத்தில் பெற்றெடுப்பேன். என நான் நினைக்கின்றேன்

“ஓ.. மண்ணில் உறங்கிக் கொண்டிருக்கும் பெரும் தாயே! எனது கணவர் சொல்லி உள்ளார். இக்குழந்தை தங்களது குழந்தை, நபியவர்களின் ஏழாவது பிரதிநிதியாவாராம் தாயே! எனது குழந்தையை நல்லதாக பெற்றெடுக்க இறைவனிடம் துஆ புரியுங்கள்”

காலை பகலவன் அந்த பள்ளத்தாக்கில் உள்ள தனிமரத்தின் கிளை களுக்குள்ளால் எழுந்து கீழே வந்து; ஹஸ்ரத் ஆமினாவின் மண்ணறை மீது மண்டியிட்டிருந்தது.

ஹமீதா மிகவும் கஷ்டப்பட்டு மெல்ல எழுந்து மண்ணில் புழுதி கலந்திருந்த தனது முன்தலையை புழுதி தட்டிவிட்டு ஒரு கையை தனது வயிற்றில் வைத்துக் கொண்டு கற்பத்தாய்கள் நடப்பது போல் மிகவும் கவனமாகவும் கஷடப்பட்டும் மெல்ல மெல்ல கிராமத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

சில மணித்தியாலங்களின் பின் சூரியன் உயர் வானத்தில் நிற்கும் போது கிராமத்துப் புறாக்கள் அதன் ஒளியின் கீற்றுகளில் தெளிந்த வானத்திலே தமது சிறகுகளை அடித்துக் கொண்டிருந்தன.

கிராமத்திலிருந்து பெண்களின் குரலை பாடும் சத்தம் காற்றோடு கலந்து சென்றது. நீரூற்றுக்கருகில் முன்னர் கண்ட சில பெண்கள் கிராம ஒழுங்கைகளில் சந்தோஷமாக அங்குமிங்கும் விரைந்து கொண்டிருந்தனர். ஒருவருக்கொருவர் ஒரு மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்.

ஆம். அங்கே இரண்டு பெண்கள் அதே இரைச்சலுடன் அழகிய மண பாத்திரங்களில் நீரெடுப்பதற்காக நீரூற்றின் பக்கம் வருகிறார்கள். அச்செய்தியை அறிந்து கொள்வதற்காக எனது காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டேன்.

'சகோதரியே சொல்கின்றார்கள். இமாம் ஸாதிக் தமது பிள்ளை பிறந்த செய்தி கிடைத்த போது சொன்னார்களாம்.‘எனக்குப் பின்னால் வழிகாட்டியும் இறைவனின் மிகச் சிறந்த படைப்பும் பிறந்துள்ளது’ என்று. (3)

“அவருக்கு என்ன பெயர் வைப்பார்கள் என்று தெரியுமா?”

“அவருடைய பிறப்புக்கு முன்னரே அவருக்கு மூஸா என பெயரிட்டிருந்தனர்.”

எனது எண்ணக் கண், எதேச்சையாக பாலைவனத்திலே நீரூற்றுக்குப் பக்கம் நின்ற இடையனின் மேல் விழுந்தது. அவன் இந்த கிராமத்தில் என்ன நடந்தது என்று தெரியாமல் தனது ஆடுகளை தடியின் மூலம் துரத்திக் கொண்டிருந்தான்.

ஒரு வினாடி நான் இச்சிறு இடையனை நபி மூஸா எனவும் இங்கு சீனா பாலைவனம் என்றும் நினைத்தக் கொண்டேன், எண்ணத்திலிருந்து விடுபட்டேன். இது புதிதாகப் பிறந்த மூஸா. தற்கால எந்த பிர்அவ்னுக்கெதிராகப் பிறந்தாரோ?!

அப்பாசிய ஆட்சியில்

இமாம் மூஸா பின் ஜஃபர் அல்காழிம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு நான்கு வயதாக இருக்கும் போது அநியாயக்கார உமையாக்களின் ஆட்சி வீழ்ச்சியடைந்து விட்டது.

கோத்திரவாத உமையா ஆட்சி அநியாயம், பலாத்காரம், அபகரிப்பு என மக்களுக்கு எதிராக செயற்பட்டு வந்தது. குறிப்பாக உண்மையான இஸ்லாமிய ஆட்சியை வேண்டி குரல் எழுப்பிய மக்களுக்கு எதிராக அளவிலா அட்டூழியங்களை இழைத்ததனால் மக்கள் எதிர்ப்பு பலமடையலாயிற்று.

அன்றைய சில அரசியல் சக்திகள் மக்களின் உரிமையை உரியவர்களுக்குச் சேர்க்க வேண்டும் என்ற போர்வையில்,குறிப்பாக இமாம் அலீயின் ஆதரவாளர்களுக்கு அவர்களது உரிமையை மீளப் பெற்றுக் கொடுத்தல் என்ற போர்வையில் அதற்காவே போரிட்டு வந்த அபூமுஸ்லிம் குராஸானியின் உதவியோடு புரட்சி செய்தனர். அவ்வாறு கைப்பற்றிய பின் ஆட்சிக்கு உரிமை கொண்ட ஆறாவது வழிகாட்டி இமாம் சாதிக் அவர்களுக்குப் பதிலாக அபுல்அப்பாஸ் அஸ்ஸப்பாஹ் எனும் அப்பாசியரை ஆட்சி பீடத்தில் அமர்த்தினர். (4)

இதனடிப்படையில் கிலாபத் என்ற போர்வையில் இன்னுமொறு மன்னராட்சிப் பரம்பரை ஹிஜ்ரி 132இல் ஆட்சியில் அமர்ந்தது.

இவர்கள் அட்டூழியத்திலும் நயவஞ்சகத்தனத்திலும் மார்க்க வரையறைகளை மீறுவதிலும் உமையாக்களை விடவும் குறைந்தோராக இருக்கவில்லை.

இவர்கள் ஹிஜ்ரி 656 வரை அதாவது 524 வருடங்கள் பக்தாதிலே நீண்ட காலமாக மன்னராட்சி புரிந்தனர்.

சங்கைக்குரிய ஏழாவது இமாம் தமது வாழ்நாளில் அபுல்அப்பாஸ சப்பாஹ், மன்சூர் தவானிகீ, ஹாதி, மஹ்தி, ஹாரூன் ஆகியோரின்; ஆட்சியை சந்தித்ததோடு, இவர்கள் அனைவரது அடக்குமுறைகளுக்கும் அநியாயங்களுக்கும் உள்ளானார்கள்.

அபுல்அப்பாஸ் சப்பாஹ் ஹிஜ்ரி 136ல் மரணிக்க அவரது இடத்தில் அவரது சகோதரன் மன்சூர் தவானிகீ உட்கார்ந்து கொண்டார். அவர் பக்தாதை

நிறுவினார். அபூமுஸ்லிமை கொலை செய்தார். அத்தோடு அலவியாக்களுக்கு அநியாயம் செய்வதிலும கொலை செய்வதிலும் வீட்டுச் சிறை செய்வதிலும்; அவர்களது பொருளாதாரத்தைக் கைப்பற்றுவதிலும் முழு மூச்சோடு ஈடுபட்டார். அத்தோடு இக்குடும்பத்தின் முக்கியஸ்தர்கள் பலரை அதிலும் முக்கியமாக இமாம் சாதிக் அவர்களைக் கொலை செய்தது.

மன்சூர் இரத்தவெறி பிடித்த, குள்ளத்தன்மையுள்ள, நயவஞ்சகத் தனமான, பேராசையுள்ள, வாக்குறுதிக்கு மாறு செய்யும் ஒருவராக இருந்தார், அப்பாசியர் ஆட்சி பீடம் ஏறுவதற்குக் காரணமாக அமைந்த அபூமுஸ்லிம் குராஸானியையே படுகொலை செய்தார். மன்சூரின் இந்த நன்றி கொல்லல் வரலாற்றிலே ஒரு பழமொழியாகவே மாறியிருந்தது.

இமாம் காழிமின் தந்தை கொலை செய்யப்பட்ட போது அவர்களுக்கு வயது இருபது. தமது முப்பது வயது வரைக்கும்,மன்சூரின் நெருக்கடியான ஆட்சியின் காரணமாக மறைவாக இருந்து கொண்டு தமது ஷீயாக்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஹிஜ்ரி 158ல் மன்சூர் இறக்கவே அவரது மகன் மஹ்தி அவ்விடத்தைக் கைப்பற்றிக் கொண்டார். மஹ்தியின் ஆட்சி மக்களை ஏமாற்றும் கபடத்தனம் நிறைந்த ஆட்சியாக இருந்தது. தனது தந்தை சிறைப்பிடித்திருந்த அரசியல் கைதிகளை (அதிகமானவர்கள் ஷீயாக்களாக இருந்தனர்) விடுதலை செய்து சுவீகரித்த சொத்துகளையும் திருப்பிக் கொடுத்தார்.

ஆனால், இமாமின் நடவடிக்கைகளில் கண்காணிப்பாக இருந்ததோடு அவர்களை உள்ளத்தால் வெறுப்பவாக இருந்தார். எதுவரையென்றால் இமாம் அலீயின் குடும்பத்தைப் பற்றி வசைபாடுபவர்களுக்கு பெரும் பெரும் பரிசுப் பொருட்களை வழங்கினார். அதில் பஷ்ஷார் இப்னு பரத் என்பவனுக்கு எழுபதாயிரம் திர்ஹம்களும் மர்வான் பின் அபூஹப்ஸ் என்பவனுக்கு ஒரு லட்சம் திர்ஹம்களும் வழய்கினார்.

முஸ்லிம்களின் திறைசேரியை கேளிக்கைகிலும் மது, மாது என்பவற்றிலும் தாராளமாகச் செலவு செய்தார். தனது மகன் ஹாரூனின் திருமணத்திற்காக ஐந்து கோடி திர்ஹம்கள் செலவு செய்தார். (5)

மஹ்தியின் காலத்தில் இமாமின் புகழ் அதிகரித்துப் பெருகத் தொடங்கியது. அவர் சிறப்பு, தக்வா, அறிவுஞான வழிகாட்டுதல் போன்றவற்றில் வானத்தில் பரிபூரண சந்திரனாக மின்னி ஒளிர் விட்டு கொண்டிருந்தார். மக்கள் நேராகவும்

மறைமுகமாகவும் கூட்டம் கூட்டமாக வந்து அவர்களின் ஆத்மீக ஊற்றுக் கண்களிலிருந்து தாகம் தீர தமது புலன்களை நிரப்பிக் கொள்ளத் தொடங்கினர்.

இது பற்றி மஹ்தியின் உளவாளிகள் அவருக்குத் தெரிவித்தனர். அவர் தனது ஆட்சிக்கு ஆபத்தாகலாம் எனப் பயந்து இமாமை மதீனாவிலிருந்து பக்தாதுக்கு அனுப்ப உத்தரவிட்டார் அங்கு அவரைச் சிறையில் இட்டார்.

ஸபாலா எனும் ஊரைச் சேர்ந்த அபூகாலித் என்பவர் அறிவிக்கின்றார். மதீனாவில் இருந்து பக்தாத் செல்லும் போது ஸபாலாவில் இமாமைக் கண்டேன்.

இமாம் என்னிடம் சில பொருட்களை அவர்களுக்காக வாங்கி வருமாறு உத்தரவிட்டார்கள். நான் மிகவும் கவலையடைந்தவனாக அவர்களுக்குச் சொன்னேன். "இந்த இரக்கமற்றவர்களின் பக்கம் போவதால் உங்கள் உயிருக்கு ஆபத்து வந்து விடும் எனப் பயப்படுகின்றேன." அதற்கு இமாம் "எனக்கு அதிலே சந்தேகமில்லை. நீ இந்த நாளிலே இந்த இடத்திலே என்னை எதிர்பார்க்கவும்" என்று நாளையும் நேரத்தையும் சொல்விட்டு பக்தாத் சென்று விட்டார்கள்.

நான் மிகவும் பதட்டத்துடன் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தேன். வாக்களிக்கப்பட்ட நாள் வந்து. இமாம் சொன்ன இடத்திற்கு விரைந்தேன். எனது உள்ளம் அடித்துக் கொண்டிருந்தது. மிக இலேசான சத்தத்தோடு பாதங்களை எட்டி வைத்தேன். நெருப்பிலிட்ட பஞ்சைப் போல் எதிர்பார்த்து வெந்து கொண்டிருந்தேன்.

மெல்ல மெல்ல வானம் நெருப்பு நிறமாக மாறிக் கொண்டிருந்தது. சூரியன் இரவின் சிறைக்குள் மாட்டிக் கொண்டது. எதேச்சையாக தூரத்தில் ஒரு தோற்றம் தென்பட்டது. எனதுள்ளம் பறக்கத் துடித்தது. அவரின் பக்கம் விரைய நினைத்தேன். ஆனால், அவர்களாக இல்லாவிடின் எனது இரகசியம் வெளியாகிவிடுமே என்ற பயமும் இருந்தது.

அவ்விடத்திலே நின்றேன். இமாம் அருகில் வந்தார்கள். அவர்கள் ஒரு கழுதையின் மேல் இருந்தார்கள். அவர்களின் தெளிந்த கண்மாணிக்கம். என்னைப் பார்த்த போது, "அபூகாலிதே! சந்தேகம் கொள்ளாதே" என்று கூறிவிட்டுத் தொடர்ந்தார்கள். "பின்னரும் என்னை பக்தாதுக்கு அழைத்துச் செல்வார்கள். அப்போது திரும்பிவர மாட்டேன்" பின்னர் அவர்கள் சொன்னவாறே நடந்து முடிந்தது.(6)

மஹ்தி, இமாமை அப்பிரயாணத்திலே பக்தாதுக்குக் கொண்டு வந்து சிறையிலடைத்த அதே இரவு இமாம் அலீயைக் கனவு கண்டார். இமாம் அலீ மஹ்திக்கு கீழ்கண்ட குர்ஆன் ஆயத்துக்களை ஓதிக் காண்பித்தார்கள். "உங்களை ஆட்சியாளராக்கியது உறவுகளைத் துண்டித்து பூமியின் மேல் குழப்பம் செய்வதற்காகவா?" (7)

ரபீஉ என்பவர் அறிவிக்கின்றார். நடு இரவில் மஹ்தி, ஒருவரை அனுப்பி என்னை அவரிடம் சமுகமளிக்குமாறு சொல்லியிருந்தார். நானும் கடுமையாகப் பயந்து போய் அவரிடத்தில் விரைந்தேன்.

அந்த அகால நேரத்தில் மேற்படி வசனத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். நான் போன போது சொன்னார். "போ. போய் மூஸா பின் ஜஃபர் அவர்களை சிறையிலிருந்து என்னிடம் கொண்டு வா." நானும் சென்று அழைத்து வந்தேன்.

மஹ்தி எழுந்து அவர்களை உச்சிமுகந்து தனக்கு அருகில் அமரவைத்து கனவின் நிகழ்வை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார். பின்னர் அதே வினாடி அவர்களை மதீனாவுக்கு அனுப்பி விடும்படி உத்தரவிட்டார்.

ரபீஉ மேலும் சொல்கின்றார். இமாமின் பிரயாணத்திற்கு இடைஞ்சல்கள் வரும் எனப் பயந்ததால், அவ்விரவே இமாமின் பிரயாண ஏற்பாடுகளை செய்தேன். அதி காலையில் இமாம் பிரயாணப் பாதையிலே இறங்கிவிட்டார்கள்.(8)

இமாம் மதீனாவில் அப்பாசிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மனிதர்களை நேர்வழிப்படுத்துவதிலும் கற்பிப்பதிலும் தமது சிஷ்யர்களைத் தயார்படுத்துவதிலுமே ஈடுபட்டிருந்தார்கள்.

மஹ்தி அப்பாஸி ஹிஜ்ரி 169ல் மரணித்து அவரது மகன் ஹாதி அரச பீடம் ஏறும் வரை இமாமின் பணி அவ்வாறே நீடித்தது. ஹாதி தந்தைக்கு முற்றிலும் மாற்றமாக பகிரங்கமாக அலவியர்களுக்கு அநியாயம் செய்து கொண்டிருந்தார். தனது தந்தை மஹ்தி ஏற்படுத்தி வைத்திருந்த தொடர்புகளைக் கூட துண்டித்து விட்டார். மிகவும் மோசமான அவருடைய நடவடிக்கைகளே ஃபக் இரத்தக்களறி ஏற்படக் காரணமாய் அமைந்தது.

ஃபக் படு கொலை

ஹுஸைன் பின் அலீ மதீனாவிலிருந்த அலவியாக்களில் ஒருவர். அப்பாசிய ஆட்சியின் அட்டகாசங்களைப் பொறுக்க முடியாமல், இமாம் காழிமின் உத்தரவோடு ஹாதிக்கு எதிராக புரட்சி செய்ய சுமார் 300 பேர் கொண்ட குழுவுடன் மதீனாவிலிருந்து மக்காவுக்குப் புறப்பட்டார். (9)

ஹாதியுடைய படை, இவர்களை ஃபக் எனும் இடத்தில் வழிமறித்து முற்றுகையிட்டு ஹுஸைனையும் அவரது படையினரையும் கொலைசெய்தனர்.

கர்பலாவில் நிகழ்ந்த அதே நிகழ்வு இவர்களுக்கும் நிகழ்ந்தது. இவர்களின் தலைகளை வெட்டியெடுத்து மதீனாவுக்குக் கொண்டு வந்தனர், இமாம் அலீயின் குடும்பத்தினர், குறிப்பாக இமாம் காழிம் ஆகியோர் இருந்த சபையிலே அத்தலைகளை பார்வைக்காக வைத்தனர்.

யாரும் எதுவும் கூறவில்லை. ஹுஸைன் பின் அலீயின் தலையைப் பார்த்த போது இமாம் சொன்னார்கள்:"இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். இறைவன் மீது ஆணையாக. அவர் முஸ்லிமாகவும் நல்லடியாராகவுமே மரணித்துள்ளார். நோன்பு நோற்றலிலும், வணக்கத்திலும் நல்லதை ஏவி தீமையை விலக்கவதிலும் ஈடுபட்டு வந்தார். நிச்சயமாக நமது குடும்பத்திலே அவருக்கு ஒத்ததாக யாரும் இருக்கவில்லை." (10)

அரசியல் வாழ்க்கையை விட்டாலும், ஹாதி தனது சுயவாழ்விலே மதுப்பழக்கமும் தான்தோன்றித்தனமும் உடையவராகவே காணப்பட்டார். ஒருமுறை யூசுப் ஸய்கல் என்பவர் சில கவிதை அடிகளை நன்றாகப் பாடியதற்காக ஓர் ஒட்டகச் சுமையளவுக்கு பணப்பொதியை கொடுத்தனுப்பினார். (11)

இப்னு தஅப் நாமீ என்பவர் சொல்கின்றார். "ஒருநாள் ஹாதியிடம் சென்றேன். அவரது கண்கள் சாராயத்தின் காரணமாகவும் நித்திரை விழிப்பின் காரணமாகவும் சிவந்திருந்தன. என்னிடத்தில் சாராயம் பற்றி கவிதை சொல்லும்படி வேண்டிக் கொண்டார். நானும் அவருக்கு சில கவிதைகளைப் பாடினேன். அக்கவிதைகளை குறித்துக் கொண்டு நாற்பதினாயிரம் திர்ஹம்கள் எனக்குத் தந்தார்." (12)

இஸ்ஹாக் அல் மவ்சிலீ எனும் அக்கால பிரபல அரபு இசையமைப்பாளர் சொல்கிறார். 'ஹாதி மாத்திரம் உயிரோடு இருந்திருந்தால் நாங்கள் எங்கள் வீட்டுச் சுவர்களைக் கூட தங்கத்தினால் கட்டியிருப்போம்'. (13)

ஹாதியும் ஹிஜ்ரி 170ல் மரணிக்க ஹாரூன் தேசத்தின் மன்னரானார். (14)

அப்போது இமாம் காழிமுக்கு 42 வயதாக இருந்தது. ஹாரூனின் காலம் சுவீகரிப்பும் தான்தோன்றித் தனமும் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது.

ஹாரூன் தன் சத்தியப் பிரமாணத்தின் இறுதியில் யஹ்யா பர்மகி எனும் ஈரானியரை தனது அமைச்சராகத் தேர்ந்தெடுத்து அவருக்கு பொதுவாகவும்

குறிப்பாகவும் யாரையும் வேலையில் சேர்ப்பதிலும் விலக்குவதிலும் அனைத்து அதிகாரங்களைiயும் வழங்கியிருந்தார். (15)

அன்றைய கால சம்பிரதாயப்படி இதற்கு எடுத்துக் காட்டாக தனது மோதிரத்தை அவருக்கு அணிவித்து விட்டு, தான் மது, மாது மாணிக்கம், கேளிக்கை என்பவற்றில் தனது காலத்தைக் கடத்தினார்.

நான்கு வயது ஆடு ஒன்றின் விலை ஒரு திர்ஹமாக இருந்த போது திறைசேரியின் வருமானம் ஐநூறு மில்லியன்,ஐநூற்று நாற்பதாயிரம் திர்ஹம்களாக இருந்தது. (16)

ஹாரூன் இந்த வருமானத்திலே கையடிக்கத் தொடங்கினார். அஷ்ஜஃ எனும் ஒரு கவிஞருக்கு தன்னை புகழ்ந்து கவி காடியதற்கு ஒரு மில்லியன் திர்ஹம்கள் கொடுத்தார். (17)அபுல் அதாஹிய்யா எனும் கவிஞனுக்கும் இப்ராஹீம் அல் மவ்சலீ எனும் இசையமைப்பாளருக்கும் சில அடி கவிதைகள் பாடி இசைவழங்கியமைக்கும் ஒவ்வொருவருக்கும் நூறாயிரம் திர்ஹம்களையும் நூறு உடை வகைகளையும் கொடுத்தார். (18)

ஹாரூனின் மாளிகையிலே குரலிலும் தோற்றத்திலும் அழகிய மங்கையரும் நாட்டிய நடிகைகளும் அதிகமாகக் காணப்பட்டனர். (19) அக்கால பிரபல்யமான இசைக் கலைஞர்களும் அங்கு எப்போதும் வீற்றிருந்தனர்.

ஹாரூன் மாணிக்கக் கற்கள் மீது அளவில்லாத ஆசை கொண்டிருந்தார். ஒருமுறை ஒரு மோதிரம் வாங்குவதற்காக ஒரு லட்சம் தீனார் கொடுத்துள்ளார். (20)

ஒவ்வொரு நாளும் அவரது சமையலறை செலவு பத்தாயிரம் திர்ஹம்களாக இருந்தன. சிலவேளை முப்பது வகையான உணவுகள் அவருக்கு சமைத்துக் கொடுத்துள்ளனர். (21)

ஒருமுறை ஹாரூன் ஒட்டக இறைச்சி சமைத்துக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டார். அதனைக் கொண்டு வந்த போது, “இப்போது கொண்டு வந்த உணவுக்கு எவ்வளவு செலவானது என்று கலீபாவுக்குத் தெரியுமா?” என்று யஹ்யா பர்மகி கேட்டார்.

“மூன்று திர்ஹம்” என பதிலளித்தனர்.

உடனே பர்மகீ “இறைவன் மீது ஆணையாக, இல்லை. இதுவரைக்கும் நான்காயிரம் திர்ஹம்கள் செலவாகியுள்ளன. காரணம் கலீபா இறைச்சி சமைத்துக் கேட்டால் கொடுக்க வேண்டும் என்பதற்காக பல நாட்களாக

தொடர்ந்து ஒட்டகங்களை வெட்டிக் கொண்டே இருக்கின்றனர்” என்று சொன்னார். (22)

ஹாரூன்; சூது விளையாடுவதிலும் மது அருந்துவதிலும் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். சிலவேளைகளில் சபையில் எல்லோரும் வீற்றிருக்கும் போதும் இச்செயலை செய்து கொண்டிருந்தார். (23)

இவை எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு பொதுமக்களை ஏமாற்று வதற்காக சில மார்க்க காரியங்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். சிலவேளைகளில் ஹஜ்ஜை நிறைவேற்ற மக்காவுக்குப் போவார். இன்னும் சில நேரங்களில் உபதேசிகளை அழைத்து தனக்கு உபதேசங்கள் வழங்கச் சொல்லிவிட்டு அதனைக் கேட்டு அழுது கொண்டிருப்பார்.

இமாமின் நிலைப்பாடு

நபிகளாரின் குடும்பத்தினரின் எதிர்ப்பின் காரணமாக அப்பாசிய ஆட்சியாளர்கள் மிகவும் திண்டாட்டமடைந்தனர். இயன்றளவுக்கு அவர்களது எதிர்ப்பை முறியடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

தம்மை பணத்திற்கு அடிமையாக்கிக் கொண்ட கவிஞர்களுக்கு அதிகம் பணம் கொடுத்து அலவியாக்களுக்கு எதிராக கவிபாட வைத்தார். அதில் ஒருவர்தான் மன்சூர் நுமைரீ என்பவர். ஹஸரத் அலீயின் குடும்பத்திற்கு எதிராக வசை பாடிய போது அவரை திறைசேரிக்குக் கொண்டு சென்று விரும்பியளவு எடுத்துக் கொள்ளட்டும் என உத்தரவிட்டார்.(24)

பக்தாதிலிருந்த அலவியாக்கள் எல்லோரையும் மதீனாவுக்கு நாடு கடத்தினார். அவர்களில் அதிகமானோரை நஞ்சூட்டியும் கொன்றும் குவித்தார். (25)

மக்கள் இமாம் ஹுஸைனின் கப்றை சியாரத் செய்வதைக் கூட தடுத்ததோடு அக்கப்றை இடித்துத் தள்ளுமாறும் உத்தரவிட்டார். (26)

அத்தோடு அங்கிருந்த இலந்தை மரத்தை தறித்து விடுமாறும் உத்தரவிட்டார். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி “இலந்தை மரத்தை தறிப்பவனுக்கு இறைவனின் சாபக்கேடு உண்டாகட்டும்” என்று மூன்று முறை சபித்துள்ளார்கள். (27)

இத்தகைய அநியாக்கார ஆட்சியை இமாம் அங்கிகரிக்க மாட்டார் என்பதிலே சந்தேகமில்லை தான். ஃபக் புரட்சிக்கு அனுமதி வழங்கியதிலிருந்து இது தெளிவாகிறது தமது ஷீயாக்களைத் தனிமையில் சந்தித்து இந்த அநியாயக்கார ஆட்சியில் எவ்வாறு நடந்து கொள்வது என ஒவ்வொருவருக்கும் இமாம் மூஸா காழிம் வழிகாட்டியிருந்தார்கள்.

ஸப்வான் பின் மெஹ்ரான் எனும் தமது தோழருக்கு இமாம் சொன்னார்கள்: “நீ எல்லா விடயத்திலும் நல்லவனாய் இருக்கின்றாய். ஆனால், உனது ஒட்டகைகளை ஹாரூனுக்கு வாடகைக்குக் கொடுக்கின்றாய்.'

அதற்கவர், “நான் அவற்றை ஹஜ் பிரயாணத்துக்காகவே வாடகைக்குக் கொடுக்கின்றேன். அத்தோடு அதன் பின்னாலும் நான் போவதில்லை” என்றார்.

“இதன் மூலம் ஹாரூன் மக்காவிலிருந்து உயிருடன் திரும்பி வந்து உனது ஒட்டகத்தையும் அதன் வாடகையையும் கொடுக்க வேண்டும் என நீ விரும்பவில்லையா?” என இமாம் கேட்டார.;

“ஏன்? விரும்புகின்றேன்”என அவர் பதிலளித்தார்.

இமாம் சொன்னார்கள்: “யார் ஓர் அநியாயக்கார ஆட்சியாளன் நிலைத்திருக்க வேண்டுமென்று விரும்புகின்றாரோ, அவர் அந்த ஆட்சியாளனைச் சேர்ந்தவராவார்.” (28)

ஆனால், சிலவேளைகளில் ஹாரூனின் ஆட்சியில் சில பொறுப்புகளை வகிப்பதற்கு அனுமதி வழங்கியதுண்டு. அரசியல் ரீதியில் அவர்கள் அரசாங்கத்திற்குள் இருப்பது ஷீயாக்களுக்கு பயனாகவும் அவர்கள் மூலமாக அலவியாக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் திட்டங்களைத்; தெரிந்து கொள்வதற்காகவுமே அனுமதியளித்திருந்தனர். அவ்வாறு அலீ பின் யக்தீன் என்பவர் ஹாரூனின் ஆட்சியில் தான் வகித்த பதவியை இராஜினாமா செய்ய முயன்ற போது இமாம் காழிம் அதற்கு அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருபோதும் இமாம் இவர்களின் அநியாயப் பிடிக்குள் சிக்கியிருந்த போதும் கூட இந்த அநியாயமான ஆட்சிக்கு இசைந்து கொடுக்கவில்லை.

இமாம் சிறைவைக்கப்பட்டிருந்த போது ஒரு நாள் கலீபா ஹாரூன், யஹ்யா பின் காலித் என்பவரை சிறைக்குள் அனுப்பி இமாமிடம் மன்னிப்புக் கோரும் படியும் மன்னிப்புக் கோரினால் விடுதலை அளிக்கப்படும் என்றும் சொல்லியனுப்பினார். ஆனால், இமாம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. (29)

இமாம் மிகவும் கடினமான நெருக்கடியின் போதும் தமது உயர் பண்புகளிலோ, நிலைப்பாடுகளிலோ தளர்ந்தது கிடையாது.

சிறையிலிருந்து ஒருமுறை ஹாரூனுக்கு எழுதிய இக்கடிதத்தின் வசனங்களைக் கவனித்துப் பாருங்கள். அதில் அவர்களது பரிசுத்தமும் ஈமானும் ஏகத்துவமும் தூய நோக்கமும் பளிச்சிடுகிறது.

“உனக்கு மிகவும் இலேசாகவும் சந்தோஷமாகவும் துன்பத்திலும் கடக்கின்ற அந்த நாட்கள் எனக்கு மிகவும் கஷ்டமாகவும் கழிகின்றன. ஆனால், நாம் இருவரும் ஒரு நாளை அடைவோம். அதற்கு முடிவேயில்லை. அநியாக்காரர்கள் அன்று கைசேதப்படுவார்கள்.’ (30)

ஹாரூனுக்கு இமாம் இருப்பதைப் பொறுத்திருக்க முடியவில்லை. ஹாரூன் இமாமை அவர்களின் அதியுயர் ஆன்மீக செல்வாக்கின் காரணமாக மக்கள் உள்ளத்தில் இடம் பிடித்ததை பொறுக்க முடியாத ஒரே காரணத்திற்காகத்தான் பொறாமைப்பட்டு சிறையிலடைத்தார்.

இமாமுடனான ஷீயாக்களின் தொடர்பை பற்றி தனது கையாட்களின் மூலம் ஹாரூன் அறிந்திருந்தார். இமாம் சந்தர்ப்பம் கிடைக்கும் எந்தவொரு வினாடியும் தமது நேசர்களுக்கு புரட்சி செய்ய உத்தரவு கொடுத்து தமது அரசை கவிழ்க்கக்கூடும் என்பதையும் விளங்கி வைத்திருந்தார். இவர்களின் வீரமான மனத்திடகாத்திரம் அறவே குறைந்தபாடில்லை என்றும் அவர் அறிந்திருந்தார்.

இமாம் தமது செயற்காடுகளை சில போது நிறுத்தி வைத்தார் எனில் அதற்கு அர்த்தம் கைவிட்டு விட்டார் என்பதல்ல. தாக்குதல் நடாத்துவதற்கான சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் காத்திருக்கும் அமைதியாகும்.

அதனால், அதற்கு முந்திக் கொண்டு கலீபா செயலில் இறங்க முனைந்தார், ஆட்சியின் அட்டூழியம், அநியாயம்,அநாதைகளின் பணத்தை சாப்பிடுதல், கிலாபத்தை மன்னராட்சியாக மாற்றியமை எதற்கும் வெட்கப்படாமல் நபிகாளாரின் மண்ணறை முன் சென்று கூறினார்.

“அல்லாஹ்வின் தூதரே! உங்கள் மகன் மூஸா பின் ஜ:ஃபர் அவர்களின் விடயத்தில் நானெடுத்த முடிவிற்காக மன்னிப்புக் கேட்கின்றேன். நான் உண்மையில் அவரை சிறையில் அடைக்க விரும்பவில்லை. ஆனால் தங்களது உம்மத்தினர் யுத்தத்தில் ஈடுபட்டு இரத்தம் ஓட்டுவார்கள் எனப் பயந்ததன் காரணமாகவே நான் இதனை செய்கின்றேன்”.

இப்படிச் சொல்லிவிட்டு அப்போதே றவ்ழா சரீபில் தொழுது கொண்டிருந்த இமாமை கைது செய்து பஸராவுக்குக் கொண்டு சென்று சிறையிலடைக்குமாறு ஏவினார்.

இமாம் ஒரு வருடம் பஸராவின் கவர்னர் ஈஸா பின் ஜ:ஃ;பர் உடைய சிறையிலே இருந்தார்கள். இமாமவர்களின் உயர்ந்த குணங்கள் ஈஸா பின் ஜ:ஃபரில் எவ்வளவு பிரதிபலிப்பை ஏற்படுத்தியதென்றால், அவர் ஹாரூனுக்கு

எழுதிய கடிதத்தில், “அவரை என் பொறுப்பிலிருந்து எடுத்து விடுங்கள். இல்லையெனில் அவரை நானே விடுதலை செய்து விடுவேன்” என எழுதினார்.

ஹாரூனின் உத்தரவின் பேரில் இமாமை பக்தாதுக்கு கொண்டு போய் பழ்ல் பின் றபீஉவிடம்; கடுங்காவலில் வைத்திருந்தனர். இறுதியில் சிந்தீ பின் ஷாஹிக் உடைய சிறைக்கு இடமாற்றப்பட்டார்கள்.

இவ்வாறு தொடர்ச்சியாக மாற்றியதற்கான காரணம் என்னவெனில், ஒவ்வொரு சிறையில் இமாம் இருக்கும் போதும் அவர்களைக் கொன்று விடுவதற்கு சிறை அதிகாரிகளுக்கு ஹாரூன் உத்தரவிட்டார். ஆனால் யாரும் அந்த பாதகச் செயலுக்கு முன்வரவில்லை. இறுதியில் ஸிந்தீ பின் ஷாஹிக் ஹாரூனின் உத்தரவின் பேரில் இமாமுக்கு நஞ்சூட்டினார்

பின்னர் பிரபல்யமான சிலரை அழைத்து வந்து, இமாம் சிறையில் இயற்கையாகவே மரணமானார், எந்தவொரு தீங்குக்கும் உட்படுத்தப் படவில்லை என சாட்சியம் அளிக்கச் செய்தான்.

இந்தத் தந்திரத்தின் மூலம், அப்பாசிய ஆட்சி ஒரு பெரும் இமாமைக் கொலை செய்தது என்ற இழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளவும், இமாமின் தோழர்கள் சந்தேகப்படாதிருக்கும் நிலையை ஏற்படுத்தவும் அவர்கள் முயன்றனர். (31)

ஆனால், இமாமின் தெய்வீக சிறப்பானது அவர்களைப் பொய்ப்பித்து தலைகுனியச் செய்துவிட்டது. காரணம், சாட்சிகள் இமாமைப் பார்த்த போது, நஞ்சூட்டப்பட்டு மிகவும் மோசமான நிலையில் இருந்து இமாம் சொன்னார்கள்:

“என்னை ஒன்பது முறை பேரீத்தம் பழங்கள் மூலம் நஞ்சூட்டினார்கள். நாளை எனது உடல் பச்சையாகி நாளை மறுநாள் நான் இவ்வுலகை விட்டுப் பிரிவேன்.” (32)

இரண்டு நாட்களின் பின் ஹிஜ்ரி 183 ரஜப் மாதம் 25ஆம் நாள் அன்னார் கூறியவாறே கச்சிதமாக இடம் பெற்றன. (33)வானமும் பூமியும் கவலையில் மூழ்கியிருந்தது. மு஼ஃமீன்கள் அனைவரும், குறிப்பாக தமது உண்மையான தலைவரை இழந்த ஷீயாக்கள் கவலையில் மூழ்கிக் கிடந்தனர்.

அறிவுப் பணி

நமது சங்கைக்குரிய இமாம்கள் தம்மிடமுள்ள தெய்வீக ஆற்றல் மூலம் எதைப்பற்றி அவர்களிடம் கேள்வி கேட்டாலும் கேட்பவரின் நிலைக்கேற்ப சரியான, பூரணமான பதிலைக் கொடுப்பார்கள். எதிரியாக இருந்தாலும் அவர்களோடு அறிவுரையாடல்களில் ஈடுபடும் போது, ஈற்றில் தம்மிடம்

எதுவும் இல்லையென்பதை எதிரிகள் ஏற்றுக் கொள்வதோடு இமாம்களின் பரந்த சிந்தனையின் சக்தியையும் மெச்சி விட்டுச் செல்வார்கள்.

கலீபா ஹாரூன் ரஷீத், இமாம் காழிமை மதீனாவிலிருந்து பக்தாதுக்குக் கொண்டுவந்த போது அவருடன் அளவளாவினார்.

ஹாரூன்: எனது சிந்தனையைக் குழப்பிக் கொண்டிருக்கும் சில விடயங்களை உங்களிடம் கேட்க விரும்புகின்றேன். இதுவரைக்கும் அதைப்பற்றி யாரிடமும் நான் கேட்கவில்லை. நீங்கள் ஒருபோதும் பொய் சொல்லமாட்டீர்கள் என எனக்குச் சொன்னார்கள். எனக்கு சரியான உண்மையான விடையைத் தாருங்கள்.

இமாம்: எனக்குப் பதில் சொல்வதிலே கருத்துச் சுதந்திரம் இருக்குமானால் உமது கேள்விக்குரிய விடையை அறிந்தவரை சொல்கிறேன்.

ஹாரூன்: பதில் சொல்வதிலே சுதந்திரமாக உள்ளீர். எதை விரும்பு கின்றீர்களோ அதை சொல்லுங்கள்.

எனது முதல் கேள்வி: ஏன் நீங்களும் உங்கள் மக்களும், அப்பாஸின் பிள்ளைகளாகிய எங்களை விட அபூதாலிபின் பிள்ளைகளான நீங்கள் மேலானவர்கள் என்று கருதுகின்றீர்கள்? ஆனால், நாங்களும் நீங்களும் ஒரே பரம்பரை அல்லவா? அபூதாலிப்-அப்பாஸ் இரண்டு பேரும் நபிகளாரின் சிறிய தந்தையர் அல்லவா? நபிகளாரின் குடும்பம் என்ற வகையில் அவ்விருவருக்குமிடையில் வித்தியாசம் இல்லையே.

இமாம்: உங்களை விட நாங்கள் நபிக்கு நெருங்கியவர்களாவோம்.

ஹாரூன்: எவ்வாறு?

இமாம்: காரணம் எங்கள் தந்தை அபூதாலிப் நபிகளாரின் தந்தைக்கு ஒரே தாய்-தந்தையில் உருவான சகோதரராகும். ஆனால் ஹஸ்ரத் அப்பாஸ் தந்தை வழியாக மட்டுமே சகோதரராவார்.

ஹாரூன்: இன்னுமொரு கேள்வி. நபியவர்கள் மரணிக்கின்ற போது , நபிகளாரின் சித்தப்பாவான எங்கள் தந்தை ஹஸரத் அப்பாஸ் உயிரோடு இருந்தார். நீங்கள் நபிகளாரிடமிருந்து வாரிசுரிமையை வாதிடுகின்றீர்கள். ஆனால்,நபியின் மற்ற சிறிய தகப்பன் ஹஸரத் அபூதாலிப், - உங்கள் தந்தை- அந்த நேரத்தில் உயிரோடு இருக்கவில்லை. ஒருவர் உயிரோடு இருக்கும் போது, உயிரோடில்லாத சித்தாப்பாவின் பிள்ளைகளுக்கு அனந்தரம் சேராது என்பது தெளிவாகத் தெரிகின்றது தானே?

இமாம் : எனக்கு விடையிலே சுதந்திரம் உள்ளதா?

ஹாரூன் : சுதந்திரமாகப் பதில் சொல்லும் என்று ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேனே.

இமாம் : இமாம் அலீ இப்னு அபீதாலிப் சொல்கின்றார்கள்: ஒருவர் மரணித்து அவருக்கு பிள்ளைகள் இருக்கும் போது தாய், தந்தை, கணவன், மனைவியைத் தவிர வேறு யாரும் அனந்தரத்திற்கு உரிமையாகமாட்டார்கள். பிள்ளைகள் இருக்கும் நிலையில் சித்தப்பாவுக்கும் வரிசுச் சொத்தில் உரிமையுள்ளது என்று குர்ஆனும் சொல்லவில்லை. ஹதீஸும் சொல்லவில்லை. எனவே சிறியதந்தையை தந்தையின் இடத்தில் கருதுபவர்களின் கருத்து அடிப்படையற்றதென்பது புலனாகிறது. (நபிகளாரின் மகள் அன்னை பாத்திமா ஸலாமுல்லஹி அலைஹா இருப்பதனால், நபிகளாரின் சிறிய தந்தை அப்பாசுக்கு அனந்தர உரிமை சேராது.)

மேலும், ஹஸரத் அலீயைப் பற்றி நபி பெருமானார் கூறியதாவது "உங்களில் மிகச் சிறந்த நீதிபதி அலீயாகும்."

மேலும் இரண்டாம் கலீபா உமர் இப்னு கத்தாப் கூறினார். "அலீ எங்களில் மிகச் சிறந்த தீர்ப்பு வழங்கக் கூடியவராவார்."

இந்த வசனம் இமாம் அலீயின் விடயத்திலே நிரூபிக்கப்பட்ட ஒரு பொது விடயமாகும். தீர்ப்பு வழங்குவதில் சிறந்து விளங்குவதற்கு நபியவர்கள் தமது ஸஹாபாக்களுக்குக் கற்பித்த அனைத்து அறிவுகளும் குர்ஆனுடைய அறிவு,இஸ்லாமிய சட்டங்களின் அறிவு, பொது அறிவு, இவையனைத்தையும் ஒன்று சேர்ந்த ஞானம் தேவை. இமாம் அலீ,தீர்ப்பிலே எல்லோரையும் விட மேலானவர் என்று சொல்லும் போது, அதன் கருத்து ஏனைய எல்லாத் துறைகளிலும் ஏனையோரை விட மேலானவர் என்பதுவாகும்.

ஹாரூன் : இன்னுமொரு கேள்வி. நீங்கள் ஏன் மக்கள் உங்களை நபியோடு தொடர்புபடுத்தி, ரசூலுல்லாஹ்வின் பிள்ளைகள் என்று சொல்வதற்கு அனுமதிக்கிறீர்கள் நீங்கள் ஹஸரத் அலீயின் பிள்ளைகள் தானே? ஒவ்வொரு மனிதனதும் பரம்பரை அவரவரது தந்தையோடு தான் தொடர்புபடுகிறது. நபியவர்களோ உங்கள் தாய்வழிப் பாட்டனார் அல்லவா?

இமாம்: நபியவர்கள் உயிரோடு வாழ்ந்து உமது மகளை திருமணம் கேட்டால் அவர்களுக்கு உமது மகளைக் கொடுப்பீரா?

ஹாரூன்: சுப்ஹானல்லாஹ். ஏன் கொடுக்கமாட்டேன்! அப்படியாயின் அரபி, அஜமி, குறைஷி எல்லோரையும் விட பெருமையும் பாராட்டுவேன்.

இமாம்: நபியவர்கள் உயிர் வாழ்ந்து எனது மகளை திருமணம் கேட்டால், (அப்படிக் கேட்கமாட்டார்கள்) நான் கொடுக்க மாட்டேன்.

ஹாரூன் : ஏன்?

இமாம்: காரணம் அவர்கள் எங்களது தந்தை. (தாய் வழியாக இருப்பினும்) ஆனால், உமக்கு தந்தையல்ல. எனவே,என்னை நபியவர்களின் பிள்ளையாகக் கருத எனக்கு முடியும்.

ஹாரூன்: பின் ஏன் நீங்கள் உங்களையே நபியவர்களின் வம்சமாகக் கருதுகின்றீர்கள். ஏனெனில், வம்சம் என்பது ஆண்பிள்ளை வழியாகவே உருவாகும். பெண்பிள்ளை வழியாக அல்லவே?

இமாம் : இதற்கு விடை தருவதில் இருந்து என்னை விட்டு விடுவீரா?.

ஹாரூன் : இல்லை பதிலளித்துத் தான் ஆக வேண்டும். குர்ஆனிலிருந்து ஆதாரம் கொண்டு வரவேண்டும்.

இமாம்: அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது: "(இப்ராஹீமாகிய) அவருடைய சந்ததியில் உள்ளவர்கள் தாம் தாவூத்,சுலைமான், அய்யூப், யூசுப், மூஸா மற்றும் ஹாரூன் ஆகியோர். இவ்வாறு தான் நன்மையாளர்களுக்கு நாம் நற்கூலி வழங்குகின்றோம். மேலும், ஸக்கரிய்யா, யஹ்யா மற்றும் ஈஸா ஆகியோரும் அவரது சந்ததியில் உள்ளவர்கள் தாம்.|| (34)

இப்போது கேட்கின்றேன். இப்ராஹீமுடைய சந்ததியாகக் கணிப்பிடப்படும் ஹஸரத் ஈஸா நபி; தாய்வழியாக வந்தவரா?தந்தை வழியாக வந்தவரா?

ஹாரூன்: குர்ஆனின் கூற்றுப்படி ஈஸாவுக்கு தந்தை இருக்கவில்லையே.

இமாம் : எனவே, தாய்வழியாகத் தானே சந்ததி என்று கூறப்பட்டுள்ளது. நாங்களும் எங்கள் தாய் ஹஸரத் பாத்திமா ஸலாமுல்லாஹி அலைஹா அவர்கள் மூலம் நபியவர்களின் சந்ததியாகின்றோம். வேறு வசனம் ஒன்றையும் ஓதி காட்டவா?

ஹாரூன் : ஓதுங்கள்.

இமாம் பின்வரும் இறைவசனத்தை ஓதினார்கள்: "(நபியே!) உமக்கு உண்மையான செய்தி கிடைத்த பின்னரும், இதைப் பற்றி உம்மிடம் எவரும் தர்க்கித்தால் (அவர்களுக்கு) நீர் கூறும்: வாருங்கள, நாம் எங்களுடைய மக்களையும்,உங்களுடைய மக்களையும், எங்களுடைய மனைவிகளையும், உங்களுடைய மனைவிகளையும், எங்களையும் உங்களையும் அழைத்து (ஒன்றுசேர்த்து) வைத்துக் கொண்டு சத்தியம்

செய்து, பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக! எனப் பிரார்த்திப்போம்.'

இவ்வாறு நபிபெருமான் அவர்கள், அவர்களை அழைத்த சமயத்தில் ஒருவருமே இவ்வாறு சத்தியம் செய்ய முன் வரவில்லை. நபியவர்கள் நஜ்ரான் வாசிகளுடன் முபாஹலாவுக்குப் போகும் போது ஹஸரத் அலீ, ஹஸரத் பாத்திமா,ஹஸரத ஹஸன், ஹஸரத ஹுஸைன் ஆகியோரைத் தவிர வேறு யாரையும் கூட்டிச் செல்லவில்லை. எனவே,மேற்கூறிய வசனத்தில் 'எங்கள் பிள்ளைகள்' என்பதன் பொருள் ஹஸரத ஹஸன், ஹஸரத ஹுஸைன்; ஆகியோர். ஆனால், அவர்களும் தாய்வழியாக நபிக்குத் தொடர்புடைய நபியின் பெண்பிள்ளையின் பிள்ளைகளாகும்.

ஹாரூன் : எங்களிடமிருந்து எதனை நாடுகின்றீர்?

இமாம் : எனது வீட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்புகின்றேன்.

ஹாரூன் : இந்த விடயத்தில் சற்று சிந்திக்க வேண்டும். (35)

இறைவணக்கம்

இறைவன் பற்றிய தெளிந்த, உயர்ந்த ஞானம், அந்தப் பெரியாருக்குரிய விசேட அடையாளம், இறைவனோடு கொண்டிருக்கும் ஆத்மீக நெருக்கம்;, இமாம்களுக்கே உரித்தான யதார்த்தமான நூரானிய்யத் எனும் ஒளிமயம் என்பன இமாம்களுக்கு உரித்தான சிறப்புகளாகும். இறைகாதலில் லயித்து வணக்கம புரிவதற்கு இவை அவருக்கும் துணையாக அமைந்தன.

அவர்கள் வணக்கத்தை, அல்குர்ஆனில்; கூறியவாறே படைப்பினங்களில் ஒரே இலக்காகக் கருதினார்கள். சமூகக் கடமைகளில் இருந்து ஓய்வு பெறும் போதுகளில் இபாதத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறெதையும் நாட மாட்டார்கள்.

ஹாரூனுடைய கட்டளையின் பேரில் சிறையிலிருந்து மீண்ட போது இவ்வாறு சொன்னார்கள்: "இறைவா!; உனக்கு சதாவும் இபாதத் செய்வதற்கான சந்தர்ப்பத்தை எனக்குத் தந்துவிடு என்று எவ்வளவோ காலமாக உன்னிடம் கேட்டு வந்தேன். எனது துஆவை ஏற்றுக் கொண்டமைக்கு. நான் நன்றி செலுத்த வேண்டும்." (36)

இந்த வார்த்தைகள், அவர்கள் சிறையில் இல்லாத போது எவ்வளவு தூரம் சமூக சேவைகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

இமாம், ரபீஉவின் சிறையில் இருந்த வேளையில், ஹாரூன் சிலவேளைகளில் சிறைக்கு மேலால் வந்து அவதானிப்பார். சிறைக்குள் பார்வையை செலுத்திக்

கொண்டு போவார். பார்க்கும் போதெல்லாம் சிறையின் மூலையொன்றில் ஏதோ ஒரு புடவையை போடப்பட்டிருப்பதை அவானித்தார்.

ஒருமுறை கேட்டார். "அங்கே கிடக்கும் உடை யாருடையது?" ரபீஉ பதிலளித்தார்: "அது புடவையல்ல. அது மூஸா பின் ஜஃபர். அதிகமான நேரங்களில் இறைவனை வணங்கிக் கொண்டும் பூமியில் சுஜூது செய்து கொண்டும் அசையாது இருப்பார்கள்."

அதற்கு ஹாரூன் "இமாம் உண்மையாக ஹாஷிமுடைய பரம்பரையில் உள்ள சிறந்த வணக்கவாளி அவர் தான்." என்று கூறினார்.

அதற்கு ரபீஉ கேட்டார்: "பின்னர் ஏன் சிறையிலே அவருக்கு மிக நோவினை கொடுக்கும்படி கட்டளை இடுகின்றீர்?"

ஹாரூன் சொன்னார்: "என்ன செய்வது, அதைவிட எனக்கு வேறு வழியில்லை" (37)

ஹாரூன் ஒருமுறை ஓர் அழகிய பணிப்பெண்ணை இமாமுக்கு பணிவிடை செய்யுமாறு இமாம் இருந்த சிறைக்கு அனுப்பி வைத்தார். இமாமுக்கு பெண்ணாசையை ஏற்படுத்தி, அதன் மூலம் அவர்களது அந்தஸ்தை மக்கள் மத்தியிலிருந்து களைய வேண்டும் என்பதற்காகவே ஹாரூன் ரசீதின் திட்டம் இமாம் அப்பெண்ணைக் கொண்டு வந்தவருக்கு சொன்னார்கள்: "நீங்கள் தான் இந்தப் பரிசுகளை விரும்புகிறீர்கள். அது பற்றி பெருமைப்படுகிறீர்கள். ஆனால், எனக்கு இது போன்றவை அவசியமே இல்லை".

இமாம் இவ்வாறு சொன்னதைக் கேள்வியுற்ற ஹாரூன் மிகவும் கோபமடைந்து "பணிப்பெண்ணை சிறைக்குள் கொண்டு போய் விடு. இமாமிடம் சொல். நாங்கள் உம்மை உமது விருப்பத்தின் படி சிறையில் அடைக்கவில்லை. அதேபோல், இப்பணிப்பெண் சிறைக்கு வருவது கூட உமது விருப்பத்தோடு சம்பந்தமில்லாதது" என உத்தரவிட்டார்.

அப்பணிப் பெண்ணினதும் இமாமினதும் தொடர்பை அவதானிக்க உளவாளிகள் ஏவப்பட்டனர்,

அப்பணிப்பெண் அதிக நேரங்கள் சுஜூதிலேயே இருக்கின்றாள் என்று ஹாரூனுக்கு தகவல் கிடைத்தது. ஹாரூன் சொன்னார், "இறைவன் மீது ஆணையாக! மூஸா பின் ஜஃபர் அப்பெண்ணை மயக்கி ஏமாற்றி விட்டார்".

பின் அப்பெண்ணை வரவழைத்து நடந்தவற்றை விசாரித்த போது இமாமின் நற்குணங்களையே எடுத்தியம்பினாள். ஹாரூன் தனது ஏவலாளன்

ஒருவனுக்கு இப்பணிப் பெண்ணை தன்னிடமே பாதுகாக்கும் படியும் இதைப்பற்றி யாருக்கும் எதுவும் சொல்ல வேண்டாம் என்றும் உத்தரவிட்டார்.

அப்பணிப்பெண்ணும் இபாதத்திலே மூழ்கியிருந்து இமாமின் மரணத்திற்கு சில நாட்களுக்கு முன் மரணித்து விட்டார். (38)

இமாம் இந்த துஆவை அதிகம் ஓதி வந்தார்கள். "இறைவா! மரணத்தின் போது சௌகரியத்தையும் கேள்வி கணக்கு வேளையில் உனது மன்னிப்பையும் நான் உன்னிடத்தில் வேண்டுகின்றேன்" (39)

அவர்கள் அதிகமாக அல்குர்ஆன் ஓதுவார்கள். அன்னார் குர்ஆன் ஓதும் சத்தத்தை மக்கள் கேட்கும் போதெல்லாம் அழுவார்கள். அந்த அளவுக்கு இனிமையாகவும் இதயத்தைத் துளைக்கும் வகையிலும் ஓதுவார்கள் மதீனா மக்கள்,இமாமை "சைனுல் முதஜஹ்ஹிதீன் -இரவில் கண்விழித்து அமல் செய்பவர்களில் சிறந்தவவர்" என சிறப்புடன் அழைத்தனர். (40)

மன்னிப்பும் பணிவும்;

இமாமின் நிகரற்ற பணிவும் மன்னிக்கும் தன்மையும் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாகவே அமைந்துள்ளன. அவர்களின் பெயருக்குப் பின்னால் உள்ள 'கோபத்தை அடக்குபவர்' என்ற அர்த்தம் தரும் காழிம் எனும் சிறப்பு பெயரே அவர்களின் பணிவுத் தன்மைக்கு சிறந்த ஆதாரமாகும்.

அப்பாசியர் ஆட்சியில் இஸ்லாமிய பிரதேசமெல்லாம் அநியாயம் தலைவிரித்து ஆடியது. மக்களின் பொருட்கள் திறைசேரி என்ற போர்வையில் சுவீகரிக்கப்பட்டன. பொதுவாக ஏழ்மை, மக்களை சூழ்ந்து கொண்டது. பெரும்பாலான மக்கள் பணமோ, பண்பாடோ அற்றுக் காணப்பட்டனர் அப்பாசியர்களின் அலவியாகளுக்கெதிரான பிரசாரங்கள் அப்பாவிகளின் சிந்தனைகளை மாசடையச் செய்தன.

சிலவேளைகளில் அறிவொழுக்கமற்ற சிலர் இமாமோடு மிக மோசமாக நடந்து கொள்வர். இமாமோ தமது உயர்ந்த பண்புகளின் காரணமாக அவர்களைச் கருணையோடு நோக்குவர்ர். தமது பணிவு, மன்னிக்கும் தன்மைகள் மூலம் அவர்களைத் தம் தப்புகளுக்கு வெட்கிப் போராய் மாற்றியுள்ளார்கள்.

இரண்டாம் கலீபாவின் பரம்பரையில் உள்ள ஒருவர் மதீனாவிலே இருந்தார். அவர் இமாமுக்கு நிறையவே தொல்லை கொடுத்தார். காணும் போதெல்லாம் வசை பாடினார். இமாமின் நண்பர்கள் அவரைக் கொலை செய்துவிட உத்தரவு வழங்குமாறு கோரினார்கள். இமாம் அதனை ஏற்றுக் கொள்ளவேயில்லை.

ஒருநாள் இமாம், மதீனாவுக்கு வெளியே உள்ள ஒரு வயல் தோட்டத்தில் அவர் வாழும் இடத்தை விசாரித்துக் கொண்டு கழுதையில் ஏறி அங்கு சென்று அவரைக் கண்டு கொண்டார்கள். அவ்வாறே கழுதையில் இருந்தவாறே தோட்டத்தினுள் நுழைந்தார்கள்.

அவர் "விவசாயத்தை ஏன் மிதித்துப் பாழாக்கிறீர்?" என்று கத்தினார். இமாம் அதனை பொருட்படுத்தாமல் அவரிடம் அண்மித்து கழுதையிலிருந்து இறங்கி மிகவும் பெருந்தன்மையுடனும் முகமலர்ச்சியுடனும் கேட்டார்கள். "இந்த தோட்டத்திற்கு எவ்வளவு பணம் செலவு செய்துள்ளீர்கள்?"

அதற்கு அவர் "நூறு தீனார்கள்" என்று கூறினார்.

"எவ்வளவு வருமானம் கிடைக்கும்?" என எதிர்பார்க்கிறீர் எனக் கேட்டார்கள்.

"மறைவான அறிவு எனக்குத் தெரியாதே" என்று அவர் சொன்னார்.

"எவ்வளவு வருமானத்தை எதிர்பார்க்கின்றீர்?" என்றுதானே கேட்டேன் என்று கேட்ட போது, "இருநூறு தீனார்களை இலாபமாக எதிர்பார்க்கின்றேன்" என பதிலளித்தார்.

இமாம் முன்னூறு தீனார்களை அவருக்குக் கொடுத்து விட்டு, "இப்போது செய்துள்ள விவசாயம் உனக்குரியது தான். இத்தோட்டத்தில் இறைவன் நீ எதிர்பார்க்கும் இலாபத்தை உனக்குத் தருமாறு பிரார்த்திக்கிறேன்" என்று சொன்னார்கள்.

அந்த மனிதன் எழுந்து இமாமின் நெற்றியை முத்தமிட்டு "சென்ற காலங்களில் உங்களுக்கு செய்த பாவங்களை தயவாய் மன்னித்துக் கொள்ளுங்கள்" என பணிவுடன் கேட்டுக் கொண்டான்.

அடுத்த நாள் அந்த மனிதர் பள்ளியிலே உட்கார்ந்து கொண்டிருக்கும் போது இமாம் அங்கு நுழைந்தார்கள். இமாமைக் கண்டதும் சொன்னார்: "இறைவன் தனது தூதை யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று நன்கறிந்தவனாவான்."

இதைப் பார்த்த இமாமின் நண்பர்கள் மிகவும் ஆச்சரியத்துடன் "என்ன நடந்தது? நீ அவரைப் பற்றி முன்பு மிகவும் மோசமாக கதைத்துக் கொண்டிருந்தாயே!" என்று கேட்டார்கள்.

அவர் மீண்டும் இமாமுக்கு பிரார்த்தனை செய்தார். இமாம், அவரை கொலை செய்ய உத்தரவு கேட்ட தனது நண்பர்களிடம் கேட்டார்கள். "எது நன்றாகவுள்ளது? உங்களின் எண்ணமா? அல்லது எனது நன்னடத்தையின் மூலம் அவரைச் சீர்திருத்தியதா?" (41)

கொடை

இமாம் இவ்வுலகை தமது வாழ்வின் இலட்சியமாகப் பார்க்கவில்லை. ஏதாவது பணம் கைக்கு வந்தால் அதனைக் தர்மம் சேவை செய்வதையே விரும்பினார்கள். குஷ்ட நிலையில் உள்ளவர்களை நிதானப் படுத்தவும், பசியானவர்களை பசிதீர்க்கவும், உடையற்றவர்களுக்கு உடை வழங்கவுமே விரும்பினார்கள்.

முஹம்மது பின் அப்துல்லாஹ் பக்ரி அறிவிக்கின்றார்:

நான் ஒரு தடவை மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டிருந்தேன். யாரிடமாவது கடன் வாங்கும் நோக்குடன் மதீனாவுக்குள் நுழைந்தேன். அங்குமிங்கும் கேட்டுப் பார்த்து முடிவு கிடைக்காததால் மிகவும் களைப்படைந்து, இறுதியில் இமாம் மூஸா பின் ஜஃபரிடம் சென்று எனது நிலையை முறைப்பட வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

அவர்களைத் தேடிச் சென்றேன், மதீனாவுக்கு அருகில் உள்ள கிராமத்தின் வயல் ஒன்றில் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்;. என்னைக் கண்டதும் என்னிடம் வந்து என்னோடு அமர்ந்து உணவருந்தினார்

“என்னிடம் உனக்கு ஏதாவது தேவையுள்ளதா?” எனக் கேட்டார்கள்.

எனது கதையை அவர்களுக்குச் சொன்னேன். இமாம் எழுந்து சென்று தோட்டத்திற்கருகில் உள்ள ஓர் அறைக்குள் நுழைந்து திரும்பி வந்து என்னிடம் முன்னூறு தீனார்களை தந்தார்கள். நான் அதைப் பெற்றுக் கொண்டு எனது குதிரையில் ஏறி திரும்பினேன் என் தேவைகளையும் நிறைவேற்றினேன். (42)

ஈஸா பின் முஹம்மத் எனும் தொண்ணூறு வயதுடையவர் அறிவிக்கின்றார்: ஒரு வருடம் வெள்ளரிக்காய், சுரைக்காய் பூசணி போன்றவற்றைப் பயிரிட்டேன். அறுவடைக்கு நெருங்கிக் கொண்டிருக்கும் போது வெட்டுக் கிளிகள் எல்லாவற்றையும் அழித்து விட்டன. எனக்கு அதில் நூற்று இருபது தீனார்கள் நஷ்டம் ஏற்பட்டு விட்டது.

இமாம் மூஸா காழிம் ஒவ்வொரு நேசர்களினதும் நிலைமைகளையும் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் என்னிடம் வந்து ஸலாம் சொல்லி எனது நிலையை விசாரித்தார்கள்.

நான், “எல்லாப் பயிர்களையும் வெட்டுக் கிளி அழித்து விட்டது” என்று சொன்னேன்.

“எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது?” என அவர்கள் வினவினார்கள்.

“எல்லாமாக நூற்று இருபது தீனார்கள்” என்று நான் சொன்னேன். இமாம் நூற்றி ஐம்பது தீனார்களை எனக்குக் கொடுத்தார்கள்.

“நீங்கள் இருப்பது பரகத்தாக உள்ளது. தயவு செய்து எனது வயலுக்கு வந்து துஆச் செய்யுங்கள்” என நான் வேண்டினேன். இமாமும் வந்து துஆச் செய்து விட்டுச் சொன்னார்கள்: “நபிகளாரிடமிருந்து அறிவிக்கப்படுகின்றது,அழிந்து போய் மிச்சமாய் இருக்கும் பணத்தையும் சொத்தையும் விட்டுவிட வேண்டாம்.”

நானும் அதே நிலத்திற்கு நீர் பாய்ச்சினேன். அல்லாஹ் அதற்கு பரகத்தினை வழங்கினான். பலமுறை அங்கு பயிர்ச் செய்கை செய்து பெற்ற அறுவடையைப் பல்லாயிரம் தீனாருக்கு விற்பனை செய்தேன். (43)

பொன்மொழிகள்

“பணிவுத் தன்மை எதுவென்றால் மக்கள் உன்னோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என விரும்புகின்றீரே அவ்வாறே நீயும் அவர்களுடன் நடந்து கொள்வதாகும்”. (44)

‘இறைவனை அறிந்து கொண்டதன் பின் அவனை நெருங்குவதற்கு மிகவும் சிறந்த வழி, தொழுகையை மேற்கொள்வதும் பெற்றோருக்கு பணிவிடை செய்வதும் பொறாமை, தற்பெருமை, ஆகியவற்றை விட்டும் விலகி நடப்பதுமாகும்’ (45)

“நம்பிக்கைக்கு மாறு செய்பவன், வியாபாரப் பொருளின் குறைகளை ஒரு முஸ்லிமுக்கு மறைப்பவன், அல்லது வேறு ஒருமுறையில் அவனை ஏமாற்றுபவன்; இறைவனின் சாபக்கேட்டை பெற்றுக் கொள்கிறான்.” (46)

“அல்லாஹ்வின் அடியார்களில் மிக மோசமானவன் யாரெனில் இரண்டு முகமும் இரண்டு நாவும் உள்ளவனாகும். முஸ்லிமான தன் சகோதரனைக் கண்டால் அவரை புகழ்வார், அவனை விட்டு தூரமாகும் போது அவரை வசைவார். ஒரு முஸ்லிம் சகோதரனுக்கு ஒரு நிஃமத் வழங்கப்படும் போது பொறாமை கொள்வார், அவருக்கு ஒரு கேடு வரும் போது அவருக்கு உதவாமல் விலகிக் கொள்வார்.” (47)

“யார் துன்யாவை விரும்புகின்றாரோ அவருடைய உள்ளத்திலிருந்து மறுமையின் பயம் வெளியேறி விடும்”. (48)

“எதிலும் மிகச் சிறந்தது நடுநிலையைக் கடைப்பிடிப்பதாகும்.” (49)

“உங்கள் பொருட்களை, ஸக்காத் கொடுப்பதன் மூலம் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.” (50)

## இமாமத் எனும் தலைமைத்துவம்

தமக்குப் பின்னால் வரும் இமாம் (அறிவு, அரசியல்) சமயத் தலைவர் யார் என்பதை அறிமுகப்படுத்துகையில் அவரது பெயர் விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிடுவதுவே நமது இமாம்களின் வழமையாக இருந்தது. அவ்வாறு செய்வதன் மூலம், அரசியல் ரீதியாக இவ்விடயத்தில் இலாபமடைய முனைவோரின் வாய்கள் அடைக்கப் பட்டன. இன்னொரு புறத்தில், உண்மையான ஷியாக்களும் தமது அடுத்த தலைமைத்துவம் பற்றிய விடயத்தில் மிகத் தெளிவான வழிகாட்டலைப் பெறுவதும் அவசியமாகும்.

இந்த அடிப்படைகளைக் கருத்திற் கொண்டு அப்பாசிய கொடுங்கோன்மை கோலோச்சிய போதும் கூட, இமாம் காழிமின் தலைமைத்துவம் பற்றி அவரது தந்தை இமாம் ஜஃபர் ஸாதிக் மிகத் தெளிவாகவே, பலமுறை, வலியுறுத்திக் கூறியிருந்தார்கள்.

ஹஸரத் அலீ பின் ஜஃபர் அறிவிக்கின்றார்கள்:

“எனது தந்தை இமாம் ஸாதிக் தனது நேசர்களுக்கு சொல்லி இருந்தார்கள். எனது மகன் மூஸாவினுடைய விடயத்தில் எனது உபதேசத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். காரணம் அவர் எனது ஏனைய பிள்ளைகளை விடவும் எனக்குப் பின்னால் எனது குடும்பத்தில் உள்ள எல்லோரை விடவும் மேலானவராகும். அத்தோடு எனக்குப் பின்னால் எனது பிரதிநிதியும்,அல்லாஹ்வின் அடியார்கள் மீது அவனது அத்தாட்சியாகவும் உள்ளார்.” (51)

உமர் பின் இப்பான் அறிவிக்கின்றார்:

இமாம் ஸாதிக் தமக்குப் பின்னுள்ள இமாம்கள் அனைவரையும் பற்றிக் கூறினார்கள். நான் அவர்களின் மகன் இஸ்மாயீலின் பெயரைச் சொன்ன போது அவர்கள் கூறினார்கள்: “இறைவன் மீது ஆணையாக, அது எங்கள் கையில் இல்லை. இறைவனுடைய கையிலேயே உள்ளது.” (52)

இமாம் சாதிக் அவர்களின் மிக நெருங்கிய மாணவர்களில் ஒருவரான ஸுராரா அறிவிக்கின்றார்:

“இமாமிடத்தில் சென்ற போது அவர்களின் பிள்ளைகளில் ஒருவரான ஹஸரத் மூஸா அன்னாரது; வலது பக்கத்தில் அமர்ந்திருந்தார். அவர்களுக்கு முன்னால் அவர்களின் மற்றொரு மகனான இஸ்மாயீலுடைய ஜனாசாவும் இருந்தது.

இமாம் என்னிடம், “ஸுராராவே! போய் தாவூத்ரகீ, ஹிம்ரான், அபூபஸீர் (அவர்களின் மூன்று தோழர்கள்) ஆகியவர்களை அழைத்துவாரும்” என்று சொன்னார்கள்.

நானும் அழைத்து வந்தேன். மேலும் பலர் வந்தனர். முப்பது பேர் வந்தார்கள். அவர்களின் வீடு நிறைந்து விட்டது.

தாவூத் ரகீயிடம், “ஜனாசாவுக்கு மேல் உள்ள புடவையை நீக்கி விடு” என்று இமாம் சொன்னார்கள். அவரும் அவ்வாறே செய்தார்.

அப்போது இமாம், தாவூதிடம், “இஸ்மாயீல் உயிரோடு உள்ளாரா?, அல்லது மரணித்து விட்டாரா?” என்று கேட்டார்கள்.

“தலைவரே! அவர் மரணித்து விட்டார்”என அவர் சொன்னார்.

இமாம் அங்கு வந்திருந்த ஒவ்வொருவருக்கும் ஜனாஸாவை காட்டினார்கள். எல்லோரும் அவர் மரணித்து விட்டதாகவே சொன்னார்கள்.

அதன்பின் சொன்னார்கள்: “இறைவா! நீயே சாட்சியாக இருந்து கொள்!” என்று சொல்லிவிட்டு அவரை குளிப்பாட்டி கற்பூரமிட்டு கபனிடும் படி உத்தரவிட்டார்கள்.

அவை முடிவடைந்த போது, மீண்டும் அவரின் முகத்தைத் திறக்கும்படி முபழ்ழல் என்பவருக்குச் சொன்னார்கள். முபழ்ழல் திறந்த போது இமாம் கேட்டார்கள். “உயிரோடு உள்ளாரா? அல்லது மரணித்து விட்டாரா?” முபழ்ழல்,மரணித்து விட்டதாக சொன்னார்.

அங்கிருந்த எல்லோரிடமும் கேட்டார்கள். எல்லோரும் அதையே சொன்னார்கள். இமாம் மீண்டும் சொன்னார்கள்.“இறைவா! சாட்சியாய் இருந்து கொள். இறைவனின் ஒளியை அணைக்க விரும்பும் ஒரு கூட்டத்தினர் இஸ்மாயீல் இமாமாக இருந்தார் என்பதை சொல்வார்கள். (தமது மகன் மூஸா அவர்களை சுட்டிக்காட்டிச் சொன்னார்கள்) யார் விரும்பாவிடினும் இறைவன் உனது ஒளியை உறுதிப்;படுத்துகிறான்.”

ஹஸரத் இஸ்மாயீலை அடக்கம் செய்தார்கள். அப்போது அங்கு வீற்றிருந்தவர்களைப் பார்த்து இமாம் கேட்டார்கள்:“அங்கு அடக்கப்பட்டுள்ளது யார்?” எல்லோரும் “தங்களின் மகன் இஸ்மாயில்” என்றனர்.

அப்போது இமாம், மூஸா காழிமின் கையைப் பிடித்து சொன்னார்கள். “இறுதி நாள்வரை உண்மை இவருடனும், இவர் உண்மையுடனும் உள்ளார்” (53)

ஒருமுறை மன்சூர் பின் ஹாஸிம் என்பவர் இமாமிடம் சென்று, “எனது தாய் தந்தை தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். ஒவ்வோர் இரவும் பகலும் உயிர்கள் மரணத்தின் வாயில் சிக்கிக் கொள்கின்றன. அப்படி ஏதாவது உங்களுக்கு நடந்தால் அதன் பின் எங்களுடைய இமாம் யார்?” என்று கேட்டார்.

இமாம் தமது வலது கையை தமது மகன் மூஸாவின் தோளிலே தட்டி சொன்னார்கள். “அப்படி ஏதாவது எனக்கு நடந்தால் எனது இந்த மகன் உங்கள் இமாமாக இருப்பார்.”

அப்போது அவர்கள் ஐந்து வயதுடையவராக இருந்தார்கள். அந்த சபையிலே அப்துல்லாஹ் எனும் அடுத்த மகனும் அச்சபையிலே இருந்தார் சிலர் அப்துல்லாஹ்வை பின்னர் இமாமாக் கருதினர்.

ஷெய்க் முபீத் (ரஹ்) அறிவிக்கின்றார்கள்:

இமாம் சாதிக் அவர்களிடமிருந்து முபழ்ழல் இப்னு உமர், முஆத் இப்னு கதீர், அப்துர் ரஹ்மான் இப்னு ஹஜாக், பய்ழ் இப்னு; முதக்தார், யஃகூப் சிராஜ், சுலைமான் இப்னு காலித், ஸப்வான் ஜமால் இன்னும் பலர் இமாம் மூஸா காழிமுடைய இமாமத் சம்பந்தமாக அறிவித்துள்ளார்கள்.

இமாம் மூஸா காழிம் அவர்களின் இரண்டு சகேதரர்களான இஸ்ஹாக் மற்றும் அலீ மூலமும் இது பற்றி அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. ; (54)

ஷீயாக்களுக்கும் ஆறாவது இமாமுடன் தொடர்புள்ளவர்களுக்கும் அவர்களுக்குப் பின் அவர்களின் மகன் மூஸா பின் ஜஃபர் காழிம் தான் இமாம் என்பதும், இமாம் சாதிக் அவர்கள் உயிரோடு இருக்கும் போதே மரணித்த அவர்களின் மகன் இஸ்மாயீலோ, அடுத்த மகன் அப்துல்லாஹ்வோ இமாமில்லை என்பதும் தெளிவாகிவிட்டது. இருப்பினும் இமாம் ஸாதிக்கின் மரணத்தின் பின் சிலர், அவர்களின் மகன் இஸ்மாயீல் அல்லது இஸ்மாயீலின் மகன், அல்லது அப்துல்லாஹ் இமாமாகி விட்டதாகக் கருதலாயினர்.

மாணவர்கள்

இமாமின் அறிவும் நடத்தையும் நபியவர்களினதும் ஏனைய அவர்களது பாட்டனார்களினதும் அறிவையும் அமலையும் எடுத்தியம்பக் கூடியதாய் இருந்தன. கல்வித் தாகமுள்ள அனைவரும் இமாமின் ஊற்றிலிருந்து தாகம் தீர்த்துக் கொண்டனர். அவர்களின் கற்பித்தல் முறை எவ்வாறு இருந்ததென்றால், மிகக் குறுகிய காலத்தில் மாணவர்கள் ஈமானிலும் அறிவிலும் மிக உயர்ந்த நிலையை அடையலாயினர்.

தமது தந்தை மரணிக்கும் போது இமாமுக்கு சுமார் 20 வயது கூட பூர்த்தியாகவில்லை. அந்த நேரத்தில் அவர்களின் தந்தையிடம் கல்வி கற்ற அனைத்து மாணவர்களும் இமாமை நாடி வரத் தொடங்கினர். தொடர்ச்சியாக முப்பது வருடங்கள் இமாமிடமிருந்து அறிவு ஞானம் கற்றனர்.

இமாமின் பயிற்சிப் பாசறையில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள், மார்க்க அறிவு, ஹதீஸ், கலாம், விவாதத்திறன் ஆகியவற்றில் ஒப்புவமையற்ற வர்களாகவும் ஒழுக்கம், நற்செயல், பணிவு போன்றவற்றில் தமது காலத்திலே எடுத்துக் காட்டாகவும்; இருந்தனர்.

தத்துவ ஞானம் பேசும் அறிஞர்கள், இந்த அறிஞர்கள் யாரிடமும் வாதம் புரியும் சக்தியைப் பெற்றிருக்கவில்லை. இவர்களோடு விவாதத்தில் ஈடுபடும் போது மிக விரைவில் சோர்வடைந்து தமது இயலாமையை ஏற்றுக் கொள்வார்கள்.

இமாமுடைய மாணவர்களின் மகத்துவமும் தகுதியும் எதிரிகளை குறிப்பாக அன்றைய ஆட்சியாளர்களை பொறாமை கொள்ள செய்தது. இவர்களுக்கு மக்களிடமிருக்கும் அன்பின் காரணமாக மக்களைப் புரட்சிக்கு தயாராக்கக் கூடும் எனப் பயந்தனர். அந்த மகான்கள் சிலரின் வரலாற்றுச் சுருக்கத்தை அவதானிப்போம்.

இப்னு அபீ உமைர்

இவர் ஹிஜ்ரி 217ம் ஆண்டு மரணமானார். மூன்று இமாம்களிடம் (இமாம் காழிம், இமாம் ரிழா, இமாம் ஜவாத்) அறிவு பெற்றவர். ஒரு பெரும் அறிஞராகவும் இமாம்களின் நேசர்களில் ஒருவராகவும் கணிப்பிடப்படுகின்றார். (55)இவருடைய அறிவிப்புகள் இன்னும் நிலைத்துள்ளன. இவர் ஷீயா, சுன்னா ஆகிய இரண்டு தரப்பினரிடமும் நம்பிக்கைக்குரியவராக இருந்துள்ளார். ஜாஹிழ் எனும் சுன்னா அறிஞர் இவரைப் பற்றிக் கூறும் போது “அபீ உமைர் அவரது காலத்தில் தன்னிகரில்லா அறிஞராக விளங்கிளார்” எனக் குறிப்பிடுகிறார்.

பழ்ல் பின் ஷாதான் அறிவிக்கின்றார்: “இப்னு அபீ உமைருக்கு ஈராக்கில் வாழும் எல்லா ஷீயாக்களினதும் பெயர்கள் தெரியும் என்று சிலர் அன்றைய அரசுக்கு செய்தி சொல்லியிருந்தனர். அரசும் அவரிடம் அவர்களின் பெயரைச் சொல்லுமாறு வேண்ட அவர் மறுத்து விட்டார்.

அப்போது அவரை நிர்வாணமாக்கி இரண்டு ஈச்சமரத்துக்கிடையில் கட்டித் தொங்க விட்டு நூறு கசையடி அடித்தனர். மேலும், ஒரு லட்சம் திர்ஹம் வரி விரித்தனர்.” (56)

இப்னு பகீர் என்பவர் அறிவிப்பதாவது: “இப்னு அபீ உமைரை சிறையிலிட்டு மிகவும் கஷ்டப்படுத்தினர். அத்தோடு அவரிடமிருந்த செல்வம் முழுவதையும் அபகரித்துக் கொண்டனர்.” (57) இக்கால கட்டத்தில் அவர் திரட்டி வைத்திருந்த ஹதீஸ் கிரந்தங்களையும் அழித்தனர்.

ஷேய்க் முபீத், அறிவிக்கின்றார்கள்:

“இப்னு அபீ உமைர் 17 வருடங்கள் சிறையிலிருந்தார். அவரது செல்வம் முழுவதும் அழிந்து விட்டது.”

ஒருவர் அவருக்கு பத்தாயிரம் திர்ஹம்கள் கொடுக்க வேண்டியிருந்தது. இப்னு அபீ உமைரின் பொருளாதாரம் அழிந்து விட்டதை அறிந்து கொண்ட அவர் தனது வீட்டை விற்று அப்பணத்தை எடுத்துக் கொண்டு இப்னு அபீ உமைரிடம் சென்றார்.

இப்னு அபீ உமைர் கேட்டார். “இப்பணம் எவ்வாறு கிடைத்தது. அனந்தரம் கிடைத்ததா? அல்லது புதையல் கண்டுபிடித்தாயா?”

அவர் : “எனது வீட்டை விற்றேன்.”

உமைர்: “இமாம் ஸாதிக் எனக்குச் சொல்லி உள்ளார்கள். அத்தியாவசிய பொருட்களில் ஒன்றான வீடு கடனில் இருந்து விதிவிலக்காகும். ஆகவே இவற்றில் ஒரு திர்ஹம் கூட எவ்வளவு தேவையிருந்தாலும் ஏற்றுக் கொள்ளமாட்டேன்'என்று சொல்லி திருப்பி அனுப்பி விட்டார். (58)

ஸப்வான் பின் மெஹ்ரான்

ஸப்வான் மிகவும் பரிசுத்தமான நம்பிக்கைக்குரியவராய் இருந்தார். அவரின் அறிவிப்புக்கு அறிஞர்கள் பெரும் முக்கியத்தவம் கொடுக்கின்றனர். இமாமே உறுதி செய்யுமளவிற்கு நற்குணத்தில சிறந்து விளங்கினார்கள். முன்னர் குறிப்பிட்டது போல், அநியாயக்காரர்களுக்கு உதவி செய்யக்கூடாது என்று இமாமிடமிருந்து செவியுற்ற போதே அவர்களுக்கான சகல உதவிகளையும் தவிர்ந்து கொண்டார். ஹாரூனுக்கு வாடகைக்கு கொடுத்து வந்த ஒட்டகைகளை இவ்வழியில் அநியாயக்காரர்களுக்கு உதவி செய்ய கட்டாயம் இருக்கக் கூடாது என்பதற்காக விற்று விட்டார். (59)

ஸப்வான் பின் யஹ்யா

இவர் இமாம் காழிமின் முக்கிய தோழர்களில் ஒருவராக இருந்தார். ஷெய்க் தூஸீ எழுதுகின்றார்:

“ஸப்வான் ஹதீஸ் அறிஞர்களிடத்தில் தனது காலத்திலே மிகவும் நம்பிக்கைக்குரியவரும் தக்வா உள்ளவருமாக கணிப்பிடப்பட்டார். (60) ஸப்வான் எட்டாவது இமாமான இமாம் ரிழாவிடமும் அறிவு பெற்றார். இமாம் ரிழாவிடம் மிகவும் மதிப்புப் பெற்றிருந்தார்.” (61)

இமாம் ஜவாத் கூட "நான் அவரைப் பொருந்திக் கொண்டிருப்பதைப் போல் இறைவனும் அவரை பொருந்திக் கொள்ள வேண்டும். என்னோடும் எனது பெற்றோர்களோடும் அவர் ஒருமுறையும் முரண்படவில்லை" என நினைவுபடுத்திச் சொன்னார்கள். (62)

இமாம் காழிம் அறிவிக்கின்றார்கள்:

"மேய்ப்பாளன் இல்லாத ஆட்டு மந்தையின் உயிருக்கு போட்டி போட்டுப் பாய்ந்து வரும் இரண்டு ஓநாய்களின் கெடுதியைவிட ஒரு முஸ்லிமுடைய தலைமைத்துவ இச்சை அவனது மார்க்கத்துக்கு கெடுதியானதாகும்"

அதன் பின் சொன்னார்கள்: "இந்த ஸப்வான் தலைமைத்துவ ஆசையுள்ளவரல்ல." (63)

அலீ பின் யக்தீன்

இவர் ஹிஜ்ரி 124இல் கூபாவில் பிறந்தார். (64) இவரின் தகப்பனும் அஹ்லுல் பைத் மத்ஹபைச் சேர்ந்தவர். இவர் தனது செல்வத்திலிருந்து இமாம் சாதிக்கிற்கு அனுப்பி வைத்தார். மர்வான் அவரை பின் தொடர்ந்தார். அதனால், அவர் மதீனாவுக்கு தப்பி ஓடிவிட்டார்.

அவரது மனைவியும் அலீ, அப்துல்லாஹ் ஆகிய இரு பிள்ளைகளும் மதீனாவுக்கு வந்தார்கள். (65) உமையா ஆட்சி வீழ்ச்சியடைந்து அப்பாசிய ஆட்சி வந்த போது யக்தீன் வெளியே தலைகாட்டத் தொடங்கினார். அவரது மனைவி பிள்ளைகளுடன் கூபாவுக்குத் திரும்பிச் சென்றார்.

அலீ பின் யக்தீன் அப்பாசியாக்களுடன் நன்கு தொடர்பை ஏற்படுத்தினார். அதனால், சில முக்கிய அரச பதவிகள் அவருக்குக் கிடைத்தன. அப்போதெல்லாம் ஷீயாக்களுக்கு ஏற்படும் அவலங்களைத் துடைப்பதற்காக தம் அந்தஸ்தைப் பயன் படுத்தினார்.

ஹாரூன் ரஷீத், அலீ பின் யக்தீனை தனது அமைச்சராக தேர்ந்தெடுத்த போது அலீ பின் யக்தீன் 'உங்கள் கருத்து என்ன?' என்று இமாம் காழிமிடம் விசாரித்தார். இமாம் சொன்னார்கள்: "உமக்கு வற்புறுத்தப்பட்டால் அன்றி ஷீயாக்களின் பொருளாதாரத்தில் கைவைக்காது பார்த்துக் கொள்."

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் கூறுகிறார்: அலீ பின் யக்தீன் எனக்குச் சொன்னார். "ஷீயாக்களிடமிருந்து வெளிப்படையாக வரிகளை அறவிட்டாலும் அவற்றை, மறைமுகமாக அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடுகின்றேன்." (66)

ஒருமுறை இமாம் காழிமுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "இந்த அரச வேலை செய்வதற்கு மனம் விடுவதில்லை. நீங்கள் உத்தரவு தாருங்கள். நான் இந்த வேலையிலிருந்து விலகிக் கொள்கிறேன்"என்று குறிப்பிட்டிருந்தார்.

இமாம் அதற்குரிய பதிலில், "உமது வேலையிலிருந்து விலக அனுமதிக்க மாட்டேன். தக்வாவைப் பேணிக் கொள்ளுங்கள்" (67)என்று எழுதினார்கள்.

ஒருமுறை இமாம் சொன்னார்கள். "நீ ஒரு விடயத்தைப் பொறுப்பெடுத்தால் நான் உனது மூன்று விடயங்களைப் பொறுப்பெடுப்பேன். அவையாவன வாளினால் கொலை, ஏழ்மை, சிறை என்பன உனக்கு வராது" என அவரிடம் கூற,"நான் பொறுப்பெடுக்க வேண்டிய விடயம் எது?" என அவர் வினவினார்.

அதற்கு இமாம், "எப்போதாவது நமது நேசர்களில் ஒருவர் உம்மிடம் வந்தால் அவரை கண்ணியப்படுத்த வேண்டும்"என்று சொன்னார்கள். (68)

அப்துல்லாஹ் பின் யஹ்யா அல் காஹிலி அறிவிக்கின்றார்:

இமாம் காழிமிடம் இருந்த போது அலீ பின் யக்தீன், இமாமின் பக்கமாக வந்து கொண்டிருந்தார். அப்போது இமாம்,தமது நண்பர்களைப் பார்த்து "உங்களில் யாராவது நபியவர்களின் ஸஹாபியைப் பார்க்க விரும்பினால் இதோ வருகிறாரே அவரைப் பாருங்கள்" என அலீயின் பக்கம் சுட்டிக்காட்டினார்கள்.

அப்போது ஒருவர் "அவர் சுவர்க்கவாசியா?" எனக் கேட்க, இமாம் "நான் சாட்சியமளிக்கிறேன். அவர் சுவர்க்கவாசியே"என்று கூறினார்கள். (69)

அலீ பின் யக்தீன் இமாமின் கட்டளையை நிறைவேற்றுவதில் ஒருபோதும் பொடுபோக்காக இருந்ததில்லை. எதனை இமாம் கட்டளையிட்டாலும் ஏன் ஏது என்று வினவாது அதனை நிறைவேற்றினார்.

ஒருமுறை சம்பிரதாயப்படி ஹாரூன் ரஷீத் சில உடைகளை அலீ பின் யக்தீனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். அவ்வுடைகளுக்கு மத்தியில் அரச மேலங்கியும் இருந்தது. அலீ பின் யக்தீன், அவற்றையும் இன்னும் சில பணத்தையும் சேர்த்து இமாம் காழிமுக்கு அனுப்பி வைத்தார்.

இமாம் அந்த அரச அங்கியைத் தவிர ஏனைய எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டார்கள். அலீ பின் யக்தீனுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில், "இந்த உடையைப் பாதுகாத்துக் கொள். கைநழுவ விடாதே. மிக விரைவில் இது உனக்குத் தேவைப்படும்" என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

இமாம் இந்த உடையை ஏன் திருப்பி அனுப்பினார்கள் என்று அலீ பின் யக்தீனுக்கு தெரியவில்லை. ஆனால், அதனை பத்திரப்படுத்திக் கொண்டார்.

சில நாட்களின் பின் அலீ பின் யக்தீன் தன்னிடம் வேலை செய்த வேலையாள் ஒருவரை வேலை நீக்கம் செய்து விட்டார்.

அவ்வேலையாள் அலீ பின் யக்தீனுக்கும் இமாம் காழிமுக்கு இடையில்; உள்ள தொடர்பையும் இவர் உடைகளை இமாமுக்கு அனுப்பி வைத்ததையும் ஹாரூனிடம் சென்று கொட்டி வைத்தான்.

ஹாரூனும் மிகவும் கோபமடைந்து, "அவரின் கணக்கைப் பார்க்கிறேன். நீ சொல்வது போலிருந்தால் நான் அவரைக் கொலை செய்து விடுவேன்" என கர்ஜித்தார், அலீ பின் யக்தீனை வரவழைத்து, "உனக்குத் தந்த அந்த அரச மேலங்கியை என்ன செய்தாய்?" என்று கேட்டார்.

"அதனை மணம் பூசி விசேஷமான இடத்தில் வைத்துப் பாதுகாக்கிறேன்." என்று அலீ விடையளித்தார். "அதனை உடனே கொண்டுவா" என்று ஹாரூன் கட்டளையிட்டார்.

அலீ பின் யக்தீன் ஒரு வேலையாளை அனுப்பி அந்த ஆடையைக் கொண்டு வந்து ஹாரூனுக்கு முன்னால் வைத்தார். ஹாரூன் அதனைப் பார்த்த போது அடங்கிவிட்டார்.

பின் சொன்னார்: "இவ்வுடையை அதன் இடத்திற்குப் பாதுகாப்பாகக் கொண்டு போய் திருப்பி வைத்து விடு. இதற்குப் பின் உனது விடயத்தில் நான் யாரையும் நம்ப மாட்டேன்."

அந்த வேலையாளுக்கு ஆயிரம் கசையடி கொடுக்குமாறும் கட்டளையிட்டார். அவன் 500 கசையடிகளைத் தாண்டு முன்னே இறந்து விட்டான். (70)

அலீ பின் யக்தீன் ஹிஜ்ரி 182ல் மரணமானார். இமாம் மூஸா காழிம் அப்போது சிறையில் இருந்தார். (71)

அவர் எழுதிய சில நூற்களைப் பற்றி ஷெய்க் முபீத் (ரஹ்), ஷெய்க் சதூக் (ரஹ்) ஆகியோர் குறிப்பிட்டுள்ளார்கள். (72)

முஃமின் அல்-தாக்

பெயர் முஹம்மத் பின் அலீ பின் நுஃமான். குடும்பப் பெயர் அபூஜஃபர். சிறப்புப் பெயர் முஃமின் அல்-தாக். இமாம் ஸாதிக், இமாம் காழிம் ஆகியோரின்; சீடர். இமாம் சாதிக்கிடம் பெரும் மதிப்புக்குக்குரியவராக இருந்ததோடு இமாம் இவரை தமது நெருங்கிய தோழர்களில்; ஒருவராகக் குறிப்பிட்டுள்ளார்கள். (73)

முஃமின் அல்-தாக் எந்தவொரு எதிரியோடு விவாதம் புரிந்தாலும் வெற்றியடையும் ஆற்றலைக் கொண்டிருந்தார். இமாம் ஸாதிக், தமது சில

நண்பர்களை இல்முல் கலாம் சம்பந்தமான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவதைத் தடுத்திருந்தார். ஏனெனில் அதற்குத் தகுதியான கிரகித்தல் போன்ற ஆற்றல்களில் அவர்கள் பின்தங்கியிருதார்கள். ஆனால், முஃமின் அல்-தாக் இத்தயை வாதங்களில் ஈடுபட வேண்டும் என்று சிபாரிசு செய்தார்கள்.

இமாம் ஸாதிக், இவரைப் பற்றி காலித் என்பவருக்கு சொன்னார்கள்: "முஃமின் அல்-தாக் அறிஞர்களோடு அறிவுரையாடும் போது ஏனையோர் பருந்தின் காலில் மாட்டும் பறவை போல திண்டாடுவர்" (74)

இமாம் சாதிக் மரணித்த போது, முஃமின் அல்-தாக்கிடம் கிண்டல் செய்யும் நோக்குடன், "உமது இமாம் மரணித்து விட்டாரே!" என்று அபூஹனீபா சொன்னார்.

முஃமின் அல்-தாக் உடனே சொன்னார்: "ஆனால், உமது இமாமுக்கு மறுமை நாள் வரை சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டுள்ளது." (75)(ஷைத்தான் பற்றிக் குறிப்பிடும் போது குர்ஆனில் வருகின்ற 'குறிக்கப்பட்ட இறுதி நாள் வரை நீ எதிர்பார்த்திருப்பீர்' என்பதையே அல்-தாக் இங்கு சுட்டிக் காட்டினார்.)

ஹிஷாம் இப்னு ஹகம்

இவர் இறையியல் கலையிலும் விவாதத்திலும் மற்றவர்களை விட மேலானவராக இருந்தார். இப்னு நதீம் எழுதுகின்றார்.

ஹிஷாம், ஷீயா இறையியல் வாதிகளில் ஒருவராகவும், இமாமத்தின் அடிப்படைகளை தெளிவுபடுத்துபவராகவும் இருந்தார் (76) ஹிஷாம் ஏனைய பல நூற்களை எழுதினார். ஏனைய மத அறிஞர்களோடு மிகவும் சுவாரஸ்யமான சம்பாஷணைகளில் ஈடுபட்டார்.

யஹ்யா பின் காலித் பர்மகீ ஹாரூன் ரஷீதுடைய முன்னிலையில் ஹிஷாமிடம் கேட்டார்: "உண்மையென்பது,வெவ்வேறு கோணங்களில் பார்க்கும் போது வேறுபட்டுக் காண முடியுமா?'

ஹிஷாம் : இல்லை

யஹ்யா: இரண்டு பேர் கருத்து வேறுபடும் போது, இரண்டு பேரும் உண்மையிலுள்ளோராக அல்லது இரண்டு பேரும் பிழையில் இருப்பதாக, அல்லது ஒருவர் உண்மையிலும் ஒருவர் பிழையிலும் இருக்கும் நிலை ஏற்படுமில்லையா?

ஹிஷாம்: ஆம். இதைவிட நான்காவது வடிவமில்லை. ஆனால், முதலாவது வடிவமாகிய, இரண்டு பேரும் உண்மையில் இருப்பதென்பதும் சாத்தியமில்லை.

யஹ்யா: ;ஒரு மார்க்கச் சட்டம் பற்றி இரண்டு பேர் கருத்துவேறுபட்டால் அவர்கள் இரண்டு பேருமே சரியாக இருப்பது சாத்தியமில்லை என்பதை ஏற்பாராயின் நபியவரகளின் வாரிசுச் சொத்து விவகாரத்தில் ஹஸரத் அலீயும் அப்பாசும் கருத்துவேறுபட்டு அபூபக்கரிடம் போனார்களே அவர்களில் உண்மையின் பக்கம் இருந்தது யார்?

ஹிஷாம்: அதில் யாரும் பிழையாக இருக்கவில்லை. இதற்கு சமமாக குர்ஆனிலும் ஒரு சம்பவம் உள்ளது. தாவூத் (அலை) அவர்களின் சம்பவத்திலே இரண்டு மலக்குகள் சண்டை பிடித்துக் கொண்டு நபி தாவூதிடம் வந்து தமது பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு வேண்டிக் கொண்டார்களே, இதில் யார் உண்மையின் பக்கம் இருந்தார்கள்?

யஹ்யா: இரண்டு பேரும் உண்மையின் பக்கமே இருந்தனர். இரண்டு பேரும் கருத்துவேறுபடவில்லை. ஆனால்,அவர்களின் வாதம் வெளிப்படையானதாக மாத்திரமே இருந்தது. அதன் மூலம் ஹஸரத் தாவூதுக்கு அறிவூட்டவே விரும்பினார்கள். (77)

ஹிஷாம் : இமாம் அலீயினதும் அப்பாசினதும் பிரச்சினையும் அவ்வாறே இருந்தது. அவர்களுக்கிடையில் கருத்துவேறுபாடு இருக்கவில்லை. இதன் மூலம் அபூபக்கர் செய்த தவறைப் புரிய வைக்க விரும்பினர். நபியிடத்திலிருந்து யாரும் வாரிசு பெறுவதில்லை என்று அபூபக்கர் சொல்வது பிழையென்பதையும் தாமே அவர்களின் வாரிசுகள் என்பதையும் புரிய வைக்கவே இவ்வாறு செய்தனர்.

யஹ்யா ஒன்றும் சொல்ல முடியாமல் திண்டாடத் தொடங்கினார். ஹாரூனும் ஹிஷாமைப் பாராட்டினார். (78)

யூனுஸ் பின் யஃகூப் அறிவிக்கின்றார்:

இமாம் ஸாதிக்கின் சந்நிதானத்துக்கு நாம் ஒரு கூட்டமாக சென்றோம் அதில் ஹம்ரான் பின் அஃ;யுன், முஃமின் அல-தாக், ஹிஷாம் பின் சாலிம், அல்-தய்யார், ஹிஷாம் பின் ஹகம் ஆகியோரும் அமர்ந்திருந்தனர். அப்போது ஹிஷாம் வாலிபராக இருந்தார்.

இமாம், ஹிஷாமிடம், "அம்ர் இப்னு உபைதோடு நடந்த விடயங்களை நம்மிடமும் சொல்லலாமே" எனக் கோரினார்.

ஹிஷாம் சொன்னார்: “உங்கள் முன்னிலையில் கூச்சப்படுகின்றேன். உங்கள் முன் எனது நாவு செயலிழந்துள்ளது”

அதற்கு இமாம், “உங்களுக்கு நாம் உத்தரவிடும் போது அதைச் செய்யுங்கள்” என்று கூறினார்கள்.

ஹிஷாம் சொன்னார்: “அம்ர் இப்னு உபைத் பஸரா பள்ளிவாயலில் அமர்ந்து மக்களுக்காக உபதேசம் செய்வதாக நான் கேள்விப்பட்டேன். இது எனக்கு சந்தர்ப்பமாக அமைந்தது. ஒரு வெள்ளிக்கிழமை பஸரா பள்ளிக்குப் போன போது அவரைக் கண்டேன். மக்கள் அவரைச் சூழ அமர்ந்திருந்து பல விடயங்களைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

மக்களைக் கடந்து அவரருகில் சென்று, “பேரறிஞரே! நான் ஒரு பரதேசி. எனக்கு உத்தரவு தாருங்கள். நானும் சில கேள்விகள் கேட்கிறேன்” என்று கேட்டேன். அவர் அனுமதி தந்ததும் கேள்விகளைக் கேட்டேன்.

நான் : உங்களுக்கு கண் இருக்கிறதா?

அவர் : பையனே! இது என்ன கேள்வி?

நான் : எனது கேள்விகள் இப்படித்தான் இருக்கும்.

அவர்: கேள். முட்டாள்தனமான கேள்வியாக இருந்தாலும் பிழையில்லை.

இரண்டாம் முறையாகக் கேட்டேன்: உங்களுக்கு கண் இருக்கின்றதா?

அவர் : ஆம்.

நான் : அதனைக் கொண்டு எதனைப் பார்ப்பீர்கள்?

அவர் : நிறங்களையும் வடிவங்களையும்.

நான் : உங்களுக்குக்கு மூக்கு இருக்கின்றதா?

அவர் : ஆம்.

நான் : அதனால் என்ன செய்வீர்கள்?

அவர் : மணங்களை நுகர்வேன்.

நான் : உங்களுக்குப்க்குப் பல் உள்ளதா?

அவர் : ஆம்.

நான் : அதனால் என்ன செய்வீர்கள்?

அவர் : உணவை அரைத்து உண்பேன்.

நான் : உமது உணர்வுகளின் மையமான மூளை இருக்கின்றதா?

அவர் : ஆம்.

நான் : அதனால் என்ன செய்வீர்கள்?

அவர்: அதன் மூலம் எனது உடலுறுப்புகளில் நடைபெறும் ஒவ்வொன்றையும் உணர்வேன். பிரித்தறிவேன்.

நான் : மூளை இல்லாமல் இந்த உறுப்புகளால் பயனுண்டா?

அவர் : இல்லை.

நான் : உங்களது உறுப்புகள் அனைத்தும் நல்லதாகவே இருக்கின்றனவா?

அவர் : எப்போதாவது இவ்வுறுப்புகள் ஏதாவது ஒன்றில் சந்தேகிக்கும் போது அந்த சந்தேகத்தை நீக்குவதற்காகவும் உறுதியடைந்து கொள்வதற்காகவும் மூளையை நாடுகின்றேன்.

நான்: எனவே, இறைவன் இந்த மையப் புள்ளியான மூளையை உறுப்புகளின் செயற்பாட்டைச் சரி செய்வதற்காகவா ஏற்படுத்தியுள்ளான்?

அவர் : ஆம்.

நான் : எனவே, அவசியமாக நமக்கு செயற்பாட்டைக் கவனிக்கும் மையமாகிய மூளை தேவைப்படுகிறது என்கிறீர்?.

அவர் : ஆம்.

நான்:இறைவன் உமது உறுப்புகளைக் கூட நல்லது கெட்டதைப் பிரித்தறிவிக்கும் வழிகாட்டியான மூளையின்றி விட்டுவிடவில்லை. ஆனால், இவ்வுலக படைப்புகள் எல்லாவற்றையும் சந்தேகங்களும் கருத்து வேறுபாடுகளும் ஏற்படும்போது தாம் நாடிச் செல்வதற்கு ஓர் வழிகாட்டி-இமாம் இல்லாமல் விட்டுள்ளான் அல்லவா?

அம்ர் இப்னு உபைத் எதுவும் பேசாமல் அமைதியடைந்து விட்டார். பிறகு என்னைப் பார்த்துக் கேட்டார்.

அவர் : உனது ஊர் எது?

நான் : கூபா.

அவர்: நீர் ஹிஷாம் அல்லவா? என்று சொல்லிவிட்டு எனக்கு அவருக்கருகில் ஓர் இடத்தைத் தந்துவிட்டு அதன்பின் நான் எழுந்து வரும் வரைக்கும் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்து விட்டார்.

இமாம் ஸாதிக் இதைக் கேட்டு புன்முறுவல் பூத்துவிட்டு கேட்டார்கள். “இந்த ஆதாரங்களை உமக்கு யார் கற்றுத் தந்தது?||

அதற்கு ஹிஷாம், “நபிகளாரின் புதல்வரே! அது இயற்கையாகவே என் நாவில் வந்து கொண்டிருந்தது” என்று கூறினார்.

இமாம் சொன்னார்கள்: “ஹிஷாமே! இறைவன் மீது ஆணையாக, இந்த ஆதாரங்கள் நபி இப்ராஹீம், மூஸா ஆகியோரின் வேதங்களிலே எழுதப்பட்டுள்ளவையாகும்.|| (79)

குறிப்பு:

இந்த நூலை இயற்றுவதில் நாம் பேரறிஞர் காழிம் குறைஷீயின் ‘ஹயாத்துல் இமாம் காழிம் அலைஹிஸ் ஸலாம்’எனும் நூலில் இருந்தே அதிக தகவல்களைப் பெற்றோம் என்பது குறிப்பிடத்தக்கது.

அடிக்குறிப்பகள்

1. மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையில் உள்ள ஓர் இடம்

2. அது ஹிஜ்ரி 128 ஸபர் மாதம் 7ம் நாள் காலைப் பொழுது

3. அல் காபீ 1.ஃ.476

4. அல் மிலல் வன்னிஹல், ஸஹ்ரிஸ்தானி 1:154

5. ஹயாதுல் இமாம் 1.ஃ.439 - 445

6. பிஹாருல் அன்வார் 48:71 - 72

7. சூரா முஹம்மது 22

8. தாரீகு பக்தாத் பா.13 ப.30 - 31

9. மகாதிலுத் தாலிபீன் 447

10. மகாதிலுத் தாலிபீன் 453

11. தாரீகுத் தபரி பா.10, ப.592

12. தாரீகுத் தபரி பா.10, ப.593

13. ஹயாதுல் இமாம் பா.1,ப.58

14. தாரீகுல் யஃகூபீ பா.2, ப.407

15. தாரிகுத் தபரீ பா.10, ப.603

16. ஹயாதுல் இமாம் பா.2, ப.29

17. ஹயாதுல் இமாம் பா.2, ப.39

18. ஹயாதுல் இமாம் பா.2, ப.32

19. ஹயாதுல் இமாம் பா.2,ப.62

20. அல் இமாமா வஸ்ஸியாசா 2

21. ஹயாதுல் இமாம் பா.2,ப.39

22. ஹயாதுல் இமாம் பா.2,ப. 40
23. ஹயாதுல் இமாம் பா.2,ப.70
24. ஹயாதுல் இமாம் பா.2,ப.77
25. மகாதலுத் தாலிபீன் 463 - 497
26. அல் அமாலீ, ; ஷெய்ஹ் தூஸி 207
27. அல் அமாலீ,; ஷெய்ஹ் தூஸி 206
28. ரிஜாலுல் கஷ்ஷி 440 - 441
29. அல் ஆமாலி, ஷெய்ஹ் தூஸி 21
30. தாரீகுல் ப∴தாத் பா.13, ப.32
31. அல் ஈபாது, ஷெய்க் தூஸி 22 – 25
32. உயூனு அக்பாரிர் ரிழா பா.1, ப..97
33. அல் காபீ பா.1,ப.486
34. அன்ஆம் - 84
35. உயூனு அக்பாரிர் ரிழா பா.1,ப.81
36. ஹயாதுல் இமாம் பா.1,ப. 140
37. ஹயாதுல் இமாம் பா.1, ப.140
38. அல் மனாகிப் பா.4, ப. 297
39. அல் இர்ஷாத், முபீத் 277
40. அல் இர்ஷாத், முபீத் 279
41. தாரீகு ப∴தாத் பா.13,ப.28
42. தாரீகுல் ப∴தாத் பா.13, ப..28
43. தாரீகுல் ப∴தாத் பா.13, ப.29
44. அல் வசாயில் பா.2, ப.456
45. துஹ்புல் உகூல்
46. முஸ்தத்ரகுல் வஸாயில் பா.2, ப.455
47. முஸ்தத்ரகுல் வஸாயில் பா.2, ப. 102
48. ஆயீன் சின்தகீ 131
49. அல் பிஹார் பா.48, ப.154

50. அல் பிஹார் பா.48, ப.150
51. அஃலாமுல் வரா லித்தபரீ 291
52. பஸாயிருத் தரஜாத் 471
53. ஈபதுன் நுஃமானி 179
54. அல் இரஷாத், முபீத் 270
55. முன்தஹல் ஆமல் 254
56. ரிஜாலுல் கஷ்ஷி 591
57. ரிஜாலுல் கஷஷி 590
58. அல் இக்திஸாஸ், ஷெய்க் முபீத் 86
59. ரிஜாலுல் கஷ்ஷி 440 – 441
60. அல் பஹ்ரஸ்த்,; ஷெய்ஹ் தூஸி 109
61. அல் பஹ்ரஸ்த்,; ஷெய்ஹ் தூஸி 148
62. ரிஜாலுல் கஷி 502
63. ரிஜாலுல் கஷி 503
64. அல் பஹ்ரஸ்த், ஷெய்ஹ் தூஸி 117
65. அல் பஹ்ரஸ்த், ஷெய்ஹ் தூஸி 117
66. அல் காபி பா.5, ப.110
67. குர்புல் அஸ்னாத் 126
68. ரிஜாலுல் கஷ்ஷீ 433
69. ரிஜாலுல் கஷ்ஷீ 431
70. அல் இர்ஷாத், முபீத் 275
71. ரிஜாலுல் கஷ்ஷீ 430
72. அல் பஹ்ரஸ்த், ஷெய்ஹ் தூஸி 117
73. ரிஜாலுல் கஷ்ஷீ 135, 239, 240,
74. ரிஜாலுல் கஷ்ஷீ 186
75. ரிஜாலுல் கஷ்ஷீ 187
76. அல்பஹ்ரஸ்த், இப்னு நதீம் 263
77. சூரா ஸாத் 21-26

78. அல் புதூலுல் முக்தாரா, செய்யித் முர்தழா. ப.26

79. றிஜாலுல் கஷ்ஷீ, ப.271 – 273, உதூலுல் காபி பா.1, ப. 196